
# Bharatanatya Arangetram



Miss Vaishnavi Jegaruban
Venue : Saraswathy Hall, Jaffna.
Date : Sunday 02nd of September 2018
Time : 3.00 pm

உ

# பரதநாட்டிய அரங்கேற்றம்

## செல்வி. வைஷ்ணவி ஜெகரூபன்

## 02-09-2018

### சரஸ்வதி மண்டபம்

சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
( ராஜா கிறீம் ஹவுஸ், நாச்சிமார்கோவிலடி,
கே.கே.எஸ். வீதி )

## பிரதம விருந்தினர்கள்

**திரு. நாகலிங்கம் வேதநாயகன்**

( மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் )

**திருமதி. பிரதீபா வேதநாயகன்**

## சிறப்பு விருந்தினர்கள்

**வைத்திய கலாநிதி. திருமதி சித்ராமலி டி சில்வா**

( பணிப்பாளர்,
உளவள சுகாதாரம், சுகாதார அமைச்சு, இலங்கை )

**திரு. கனகரத்தினம் கேசவன் - JPUM**

( சிரேஷ்ட சட்டத்தரணி )

**வைத்திய கலாநிதி வு. சத்தியமூர்த்தி**

( பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் )

## சிறப்பு விருந்தினர்கள்

**திருமதி N. பாலசுப்பிரமணியம்**

( பிரதேச செயலர், தெஹிவல )

**திருமதி. E. அன்ரன் யோகநாயகம்**

( பிரதேச செயலர், நல்லூர் )

**திருமதி. சு. மதியழகன்**

( பிரதேச செயலர், கோப்பாய் )

# நிகழ்ச்சி நிரல்

மங்கல இசை

மங்கல விளக்கேற்றல்

அரங்க பூசை

புஸ்பாஞ்சலி – அலாரிப்பு

வரவேற்புரை – செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல்

ஜதீஸ்வரம்

வாழ்த்துரை – திருமதி ஜெயந்தி வினோதன்
(சட்டத்தரணியும் தொழிலதிபரும்)

கௌத்துவம்

மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

வர்ணம்

சிறப்புரை – வைத்தியகலாநிதி திருமதி. சித்ரமாலி டி சில்வா

அணிசேர் கலைஞர்கள் கௌரவிப்பு

பதம்

வாழ்த்துரை – பேராசிரியர் க. தேவராஜா
(தலைவர், வடமாகாண சுற்றுலா பணியகம்)

கீர்த்தனை

அரங்கமைப்பு கலைஞர்கள் கௌரவிப்பு

கீர்த்தனை

பிரதம விருந்தினர் உரை – திரு. நாகலிங்கம் வேதநாயகன்
( அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் )

நன்றியுரை – வைத்திய கலாநிதி வே. ஜெகரூபன்

தில்லானா

மங்களம்

# இன்று கௌரவிக்கப்படும் மூத்த கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| 1. | இசைவாணர் மு. கண்ணன் | – இசையமைப்பு |
| 2. | கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் | – நடனம் |
| 3. | கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா | – நடனம் |
| 4. | நடனத்திலகம் வசந்தி குஞ்சிதபாதம் | – நடனம் |
| 5. | கலாவித்தகர் பத்மினி செல்வேந்திரகுமார் | – நடனம் |
| 6. | நாட்டிய கலைமணி சுமதி புவனேந்திரா | – நடனம் |
| 7. | கலாவித்தகர் ஹேமவதி கபிலதாஸ் | – சங்கீதம் |
| 8. | கலாநிதி சின்னத்துரை மகேந்திரன் | – மிருதங்கம் |
| 9. | இசைக்கலைமணி நந்தினி விஜயரட்ணம் | – வீணை |
| 10. | இசைக்கலைமணி வரதலக்ஷ்மி பாலசந்திரன் | – வீணை |
| 11. | கலைஞானச்சுடர் பாக்கியலக்ஷ்மி நடராஜா | – வயலின் |
| 12. | இளஞ்சைவப்புலவர் வளர்மதி சுமாதரன் | – இலக்கியம் |



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்



021 222 2870

ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

...... ...... 20........



## அருளாசிச் செய்தி

கலாரசிகப் பெருமக்களுக்கு!

செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் இன்று பரதநாட்டிய அரங்கேற்றம் காண்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பாவ, ராக, தாள நிலையைக் கொண்ட இப்பரத நாட்டியம் ஆடல் அரசானல் மனித குலத்திற்கு வழங்கப்பட்ட கொடையாகும். ஆடுவோருடைய மனதையும் அனுபவிப்போருடைய பஞ்ச பொறிகளையும் ஒருநிலைப்படுத்தும் செயலாகும். பரதக்கலையை முறையாகப் பயின்று இன்று அரங்கிற்கு வரும் செல்வி வைஷ்ணவி பல கலைகளிலும் தனக்கென சாதனை படைத்து நிறைவாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்**

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA, TEL : + 94 11 259 1344
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# ஆசிச் செய்தி

*தில்லையில் ஆடியசிற்பரனே*
*சிவசிவ சிவசிவ தற்பரனே*
*(யோகர் சுவாமிகள்)*

ஆடற்கலையின் அதிபதி தில்லை நடராஜப் பெருமான். பரத முனிவர் என்பவர் இக்கலையை உலகுக்கு உவந்தளித்தார். முகபாவனையாலும் அங்க அசைவுகளாலும் ஆடல் வல்லானின் 64 திருக்கோலங்களையும் நவ ரசங்களையும் வெளிப்படுத்தக்கூடிய திறன் படைத்தது இவ்வரிய கலை.

இத்தகைய தெய்வீகக் கலையை தனது இள வயதிலேயே. பெற்ற தாயையே குருவாகக் கொண்டு கற்கும் பாக்கியம்பெற்ற செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் மிகுந்த பூர்வபுண்ணியம் வாய்க்கப்பெற்ற குழந்தையென்றால் மிகையாகாது.

பன்னிரண்டு வயது நிரம்பிய இப்பிள்ளை எதிர்காலத்தில் மேலும் இக்கலையைத் திறம்படப் பயில்வதன் மூலம் தன்னை உணர்த்தி ஓர் நாட்டிய தாரகையாகத் திகழவும், இன்று நடைபெறும் அரங்கேற்ற நிகழ்வு சிறப்பாக நடைபெறவும் ஆசிவேண்டி எல்லாம்வல்ல தில்லை நடராஜப் பெருமானையும் பூஜ்ய குருதேவதையும் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்,
**ஓம் சிதாகாசானந்தா**
**சுவாமி சிதாகாசானந்தா,**
சின்மயாமிஷன்,
யாழ்ப்பாணம்.

# ஆசீர்வாத மடல்

பரதநாட்டிய கலையைக் கற்று நாட்டியத்துறையில் சிறந்த பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் என்பவருக்கு பௌத்த மதகுருவினுடைய வாழ்த்துக்களும் சக்தியும் கிடைப்பதோடு மேலும் எதிர்காலத்தில் பல கலைகளைக் கற்று நலமுடன் வாழ எனது ஆசீர்வாதங்களும் உரித்தாகட்டும்.

மும்மூர்த்திகளின் சரணம்

விகாராதிபதி வண. மீகஹஜந்துரே
கீர்த்தி ஶ்ரீ நந்தாராம ஞானரத்ன தேரர்

# பரதக்கலை



பரதநாட்டியம் என்ற சொல்வழக்கு பிற்காலத்தில் வந்தது. ஆனால் இக்கலை வடிவம் மிகப் பழமையானது பழந்தமிழ் மக்கள் இக்கலை வடிவத்தை கூத்து என்றும் ஆடல் மற்றும் நாட்டியம் என்றும் அழைத்தனர். இது பற்றி சங்ககால இலக்கியங்களில் பல குறிப்புகள் உள்ளன.

பரதநாட்டியமானது பரதமுனிவரால் உண்டாக்கப் பட்டது. அதனால் "பரதம்" என்ற பெயர் வந்ததாக கூறுகின்றனர். பரம் என்ற சொல்லில் ப - பாவம், ர- ரகம், த - தானம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதாக கூறப்படுகின்றது.

இப்பரத நாட்டியத்தை ஆடுபவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பெண்களே! இக்கலையை பயில்வதனால் மன அழுத்தம் குறைவதுடன் உடலில் புத்துணர்ச்சியையும் நாடி நாளம் சீரான குருதி ஓட்டத்தையும் மூட்டுக்களின் முறையான அசைவுகளையும் நோய்கள் இன்றியும் வாழ வழிவகுக்கின்றது. அத்தோடு இதனைப் பார்ப்பவர்களுக்கும் உடலில் சுறுசுறுப்பையும் சந்தோஷத்தையும் மேலோங்கச் செய்கின்றது.

இந்த பரதநாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்தும் வைஷ்ணவி ராகம் தாளம் தவறாமல் மிகவும் அருமையாகவும் சிறப்பாகவும் இந் நடனத்தை நிகழ்த்துவதற்கு ஆசி கூறுகிறேன். அத்தோடு தான் பயின்ற இந்த கலையை எதிர்காலத்தில் அழியவிடாது பல பேருக்கு இக்கலையைக் கற்றுக்கொடுக்கவும் வாழ்த்துகிறேன்.

பரதம் ஒரு வாழ்வியற்கலை, அழகியல் சார்ந்தது. யாழ்ப்பாண மண்ணின் பாரம்பரியங்களோடு கலந்த இக்கலையை மிகச்சிறிய வயதில் கற்று அரங்கேற்றும் இச்சிறுமியை வாழ்த்துவதில் பெருமகிழ்வு. அத்தோடு அவருடைய பெற்றோர் குடும்பத்தினர் நண்பர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துக்கள்.

நன்றி!

மௌலவி ஏ.எம். றழீம் (மக்கி)
பிரதம கதீப் - மஹியித்தீன் ஜும்மாப்பள்ளி,
செம்மாதெரு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



"நீர்வை மணி"

## பிரம்மஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள்

(மூத்த தமிழ் எழுத்தாளர், ஜோதிடர், சிவாச்சார்யார்)
சனாதனசேவா பீடம்
ஸ்தானீக பிரதம குரு, செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில், நீர்வேலி

# ஆசியுரை



இறைவனின் திருநடனத்திலேயெ ஐந்தொழில்களும் இடம்பெறு கின்றன. அந்த திருநடனமே பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் அடிப்படையாகிறது. ஆக, நடனக்கலையை இந்து தர்மம் மிகப் புனிதமானதாகக் கருதுகிறது. ஆனால், இன்று மேலைத்தேய நடனத்தின் வருகை நம் புனித நடனக்கலையை சீரழித்து, குத்துப்பாட்டுக்கு குடித்துவிட்டு ஆடுவதே நவீன நடனம் என்றொரு தோற்றப்பாட்டைக் கொடுத்து வருகிறது.

ஆக, சமூகத்தை செம்மைப்படுத்த வேண்டுமாயின், நம் பாரம்பரிய நடனக்கலை காப்பாற்றப்படவேண்டும். அதில் இளைய தலைமுறை ஈடுபவேண்டும். அந்த வகையில் பரத நாட்டியத்தில் ஈடுபட்டு இன்று அரங்கேற்றம் காணும் சௌபாக்கியவதி வைஷ்ணவியை உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

இத்திருமகளின் தந்தையார் மருத்துவர் Dr. ஜெகரூபன் நம் நீர்வை மண்ணின் மைந்தர். திருவாளர் Dr. க. வேலாயுதபிள்ளை தம்பதியரின் புதல்வர். தாயார் ஸ்ரீமதி. ஜனீத்திரா அவர்கள் சிங்கம் பார்மசி உரிமையாளர் சோமசூரியசிங்கம் அவர்களும் புகழ்பூத்த விவாகப்பதிவாளர் வரதலக்ஷ்மி அம்மையாரும் பேறாகப் பெற்ற நங்கை.

இவ்வாறு சைவத்தமிழ் உறவு பூண்ட இருமரபும் இணைவுற்றது சிறப்பு. தவிர, பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் செல்வி. வைஷ்ணவியின் தாயார் தமிழகத்தில் சென்று முறைப்படி பரதம் கற்றவர். இவரது அரங்கேற்றம் 1994ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கிறது. அப்போது எதிர்பாராத விதமாக, நீர்வைக்கந்தலானய பிரதம சிவாச்சாரியராக விளங்கிய அமரர். பிரம்மஸ்ரீ சு. இராஜேந்திரக் குருக்களே அந்நிகழ்வில் கலந்து கொண்டு அரங்கபூஜை செய்து ஆற்றுப்படுத்தியிருக்கிறார்.

நமது வணக்கத்துக்குரிய குருமார்களுள் ஒருவரும் சிறந்த அறிஞருமான குருக்கள் அவர்களின் ஆசி அவர்களை நீர்வேலியிலேயே நிலையான பந்தத்தை ஏற்படுத்தி திருமண உறவு மூலம் உள்வாங்கி யிருக்கிறது.

மேலும், வைஷ்ணவியின் பெற்றோரான Dr. ஜெகரூபன் தம்பதியர் நீர்வை செல்லக்கதிர்காமப் பெருமான் பேரில் மாறாத பக்தியுடையவர்கள். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமாளுக்கு வைகுண்ட ஏகாதசி உற்சவத்தை தமது உபயமாக செய்து மகிழ்பவர்கள்.

இந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக, இன்று அடுத்த தலைமுறையைச் சேர்ந்த வைஷ்ணவி அவர்கள் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்கிறார். அவரது பெற்றோரும், அவர்கள் பெற்றோரும் பேணி வந்த அறத்தை – மரபை – பண்பாட்டை – குலப்பெருமையை – கல்வியோடு கூடிய ஒழுக்க நெறிமுறை மிக்க வாழ்வியலை சௌபாக்யவதி வைஷ்ணவி தொடர்ந்து காப்பற்றி இன்னும் பன்மடங்கு பெருமையைச் சேர்ப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

எல்லாம்வல்ல நீரவாடீபுர நிவாஸன் செல்லக்கதிர்காம முருகன் திருவருட் கருணையால் செல்வி வைஷ்ணவியின் பரதக்கலை அரங்கேற்றம் சிறப்புறவும், அவரது கல்வி, தொழில், வாழ்க்கை முன்னேற்றமுறவும் ஆசீர்வதிப்பதோடு இவரது குடும்பத்தாரும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெற வாழ்த்துகின்றோம்.

"கதிர்காம கந்தன் பாதம் கனவிலும் காத்து நிற்கும்"

**பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜக் குருக்கள்**
மூத்த தமிழ் எழுத்தாளர், ஜோதிடர், சிவாச்சார்யார்

# அருள் ஆசியுரை



ஆடல் வல்லான் நடராஜப் பெருமானால் அருளப்பெற்ற பரதநாட்டியக் கலை எமது சமயத்தினதும் கலை கலாசாரங்களை எடுத்தியம்புகின்றது. அந்த வகையிலே செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் ஆடல் கலையினை முறையாகப் பயின்று 02-09-2018ம் திகதியன்று அரங்கேற்றம் காண்பதினூடாக அவையோரை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடிக்க திடசங்கற்பம் கொண்டுள்ளார். செல்வியின் அபிநயங்கள் அவையை மெய்மறக்கச் செய்யட்டும். எமது ஆலயத்தினுள் 15ம் நாள் மஹோற்சவத்தை பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்ற திரு.திருமதி. சோமசூரியசிங்கம் அவர்களின் பேத்தி என்ற வகையிலே செல்வி வைஷ்ணவியின் அரங்கேற்றத்திற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

செல்வி வைஷ்ணவியை இக்கலையை பயிற்றுவித்த அவர்தம் பெற்றோர்களான திரு.திருமதி. ஜெகரூபன் ஜெனீத்திரா தம்பதிகளை மனதார பாராட்டி வாழ்த்துகிறேன். செல்வி வைஷ்ணவியை பயிற்றுவித்த குருவையும் வாழ்த்தி நிற்கின்றேன். செல்வியின் அரங்கேற்ற விழா அனைத்து வகையிலும் சிறப்புற அமைய எல்லாம்வல்ல பரம்பொருளாம் அன்னை வீரமாகாளி அருள்பாலிக்க வேண்டுமென பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!


**சிவாச்சாரிய இளவரசு, சக்தி கிரியாவியாசர்,**

**சாமஸ்ரீ தேசமான்ஜ**

**சிவஸ்ரீ சிவ. கமல்ராஜ் குருக்கள்**

பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில்.

சங்கிலியமன்னனின் இராஜகுரு பரம்பரையினர்

சிவஸ்ரீ பரமசாமிக்குருக்கள், செல்லக்குருக்கள்,

சோமசுந்தரக்குருக்கள், நடராசக் குருக்கள்,

சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் வாரிசு



PRATHISHTA KALAPOOSHANAM
BRAHMASRI S.GOWRISWARAKURUKKAL
CHIEF PRIEST: SRI VAKRATHUNDAVINAYAGAR TEMPLE
MELBOURNE
AUSTRALIA



# ஆடற்கலையும் ஆண்டவன் அருளே!

உலகெல்லாம் உணர்ந்து ஓதுவதற்கரிய பஞ்ச கிருத்திய காரணன் சிவகாமியோடு சேர்ந்து தில்லையில் திருநடனம் புரிந்தான். அவன் அருளால் ஆடற்கலை இன்று உலகளாவிய ரீதியில் பிரசித்திபெற்று சகல கண்டங்களிலும் பலராலும் போற்றப்பட்டும் பயில்விக்கப்பட்டும் மஹோன்னதநிலையை அடைந்துள்ளது.

ஆயகலைகள் அறுபத்து நான்கில் ஆடற்கலையும் ஒன்றாகும். அவ்விதமான நடனக்கலையை பயின்று 1994ல் அரங்கேற்றிய நாட்டியக் கலைமணி ஜனித்ராவின் வாரிசு, வைத்திய கலாநிதி ஜெகரூபனின் புத்திரி, செல்வி வைஷ்ணவி தனது பன்னிரெண்டாவது வயதில், இன்றைய தினம் யாழ். நகரில் அரங்கேற்றம் செய்கின்றார் என்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

செல்வி வைஷ்ணவி, நடனக்கலையில் மட்டுமமன்றி, சகல கலைகளிலும் உன்னதநிலையை அடைந்து உலகு போற்ற வாழவேண்டுமென எல்லாம்வல்ல நவாலி அந்திரான் அழகனதும், மெல்பேண் வக்ரதுண்ட விநாயகரதும், பாதாரவிந்தங்களைப் பணிந்து, அரங்கேற்றம் சிறப்புற நிகழவும், வைஷ்ணவி பல்லாண்டு வாழவும் எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**சோ. கௌரீஸ்வரக்குருக்கள்**
**நவாலி**



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

திகதி:........................

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com  Hot Line:- 0776258511




## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

பரதக்கலை தெய்வீகமானது. ஆடலரசன் அம்பல வாணனின் சிற்சபையில் அரங்கேறிய கலை இது. பரத முனிவர் வகுத்த பரத சாஸ்திர விதிக்கமைய பேணிப் பாதுகாக்கப்பட்டுவரும் உன்னத கலை வடிவமாகவும் சிறப்புப் பெறுகிறது. சைவத் தமிழரின் பண்பாட்டில் பரதநாட்டியக் கலை உயர்நிலையில் அமைந்துள்ளது. திருமுறைகளிலும் புராணங்களிலும் இத்தகைய ஆடற்கலையின் பெருமை சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இப்புனிதக் கலையை செல்வி வைஷ்ணவி ஜெயரூபன் அவர்கள் முறையாகக் கற்று அரங்கேறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். அரங்கேறும் வைஷ்ணவியின் தந்தை கலைகள் மீதும் தமிழ்மொழியின் மீதும் மிகுந்த ஆர்வமும் அபிமானமும் கொண்டவர். இதனால், சிறுவயதிலேயே தனது புதல்வியை பரதக்கலையை பயிலவைத்து அரங்கேற்றம் காண்பது மிகவும் பாராட்டத்தக்கது. வைஷ்ணவியின் பெற்றோர் மட்டுமன்றி, அவரது பேரன் பேத்திமாரும் கலைகள் மீது கொண்டிருக்கும் ஆர்வத்தை யான் நன்கு அறிவேன்.

கலைகள் மீதும் சமூகப் பணிக்ள மீதும் அதீத அக்கறை கொண்ட குடும்பத்தவர்களின் இனிய மழலையின் அரங்கேற்றம் சிறக்க அருள்மிகு துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

No: 5173

කාර්යාලය / அலுவலகம் / Office — 021 221 9376
ෆැක්ස් / தொலைநகல் / Fax — 021 221 9374
වෙබ් අඩවිය / இணையம் / Web — www.np.gov.lk
මගේ අංකය / எனது இல / My No — G/NPC/HG/CMA

රෙජිනෝල්ඩ් කුරේ
ரெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
**Governor, Northern Province**

ආණ්ඩුකාරවර කාර්යාලය
ஆளுநர் செயலகம்
**Governor's Secretariat**

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

දිනය / திகதி / Date — **24/07/2018**

## Northern Province Governor's message to Bharatanatya Arangetram celebration of Ms.Vaishnavi Jegaruban

**It gives me great pleasure to send my blessings for you on your Bharatanatya Arangetram. The first performance, the first applause and the first word of appreciation are always special for an artiste.**

**Bharatanatyam has been practised for thousands of years. The art is said to have directly evolved from Lord Shiva known as Lord Nataraja (King of Dance) who is the cosmic dancer. You are very fortunate that you have learnt such a divine art.**

**On this very special day, Your family members, relatives, friends, teachers and audience - all are so excited and happy to see you celebrate your Bharatanatya Arangetram by performing what you have learnt for years ! An accomplishment reflects the potential and hard work. I understand that you are a very talented, hard working and dedicated student.**

**It is said that a singer's soul is in his throat, a poet's soul is in his heart, but a dancer's soul parades the entire body. So, keep it up and enjoy the divine art , Bharatanatyam forever!**

**My special blessings and best wishes to you, your parents, friends and teachers on this great day of your life!**

**Thanks.**

**Reginald Cooray,**
**Governor,**
**Northern Province**

Reginald Cooray
Governor
Northern Province

උප කාර්යාලය :
9/1, ලිලි මාවත, ජයන්තිපුර,
බත්තරමුල්ල.

உப அலுவலகம் :
9/1, லில்லி மாவத்தை, ஜெயந்திபுர, பத்தரமுல்லை.
දුරකථන / தொலைபேசி / Telephone : 0112883371
ෆැක්ස් / தொலைநகல் / Fax : 0112885436
e-mail: hongovcol@gmail.com

**Sub Office :**
**9/1, Lily Avenue, Jayanthipura,**
**Battaramulla.**

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්

ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

**Justice C.V.Wigneswaran**


**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி,மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி, மோட்டார் வாகன வீதிப் போக்குவரத்து ஒழுங்கமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சு

මුදල් හා සැලසුම්, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල,නිවාස හා ඉදිකිරීම්, සංචාරක,පළාත් පාලන, පළාත් පරිපාලන, ග්‍රාමීය සංවර්ධන,මාර්ග සංවර්ධන,මෝටර් රථ වාහන මාර්ග නීතිය සහ ප්‍රවාහන අමාත්‍යාංශය

Ministry of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Tourism, Local Government, Provincial Administration, Rural Development, Road Development, Motor Traffic and Transport

# வாழ்த்துச் செய்தி



தமிழர்களின் பண்பாட்டு நாகரிகங்களின் எடுத்துக்காட்டாக விளங்கும் மிகத்தொன்மை வாய்ந்த தெய்வீகக் கலையாகப் போற்றிப் பாதுகாக்கப்படும் பரதநாட்டியக் கலையை தமது தாயார் திருமதி. ஜெனித்ரா ஜெகரூபன் அவர்களிடம் முறையாகப் பயின்று இன்று தமது அரங்கேற்ற ஆடல் நிகழ்வுகளை எமது கண்களுக்கு விருந்தாக அளித்தரவிருக்கின்ற செல்வி. வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் ஆடல் அரங்கேற்றச் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செயதி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்து பாரம்பரிய அழகியல் மரபில் இசை, நடனம், நாடகம் ஆகியவை சிறப்பார்ந்த ஆற்றுகை வடிவங்களாக வளர்ச்சியுற்றிருக்கின்றன. இந்து சமயத்தோடு இயல்பாகக் கலந்த ஆடல்வடிவமாக பரதநாட்டியக் கலை காணப்படுகின்ற போதும் இன்று சமயங் கடந்து தமிழ் பேசுகின்ற அனைத்து மக்களிடத்தும் ஆட்சி கொண்டிருக்கும் ஆடல் வடிவங்களாகப் பரதநாட்டியக் கலை திகழ்வது எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

அந்த வகையில் இன்றைய இந்த ஆடல் அரங்கேற்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ளுகின்ற செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரதநாட்டியக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி யஇந்த ஆடல் நங்கையின் பெற்றோர்கள் திரு.திருமதி. ஜெகரூபன் அவர்களை இத்தருணத்தில் வாழ்த்தி இந்த நிகழ்வு சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து இச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

நன்றி!

**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**

முதலமைச்சர்,

வட மாகாணம்.

කරුණාරත්න පරණවිතාන (පා.ම.)
கருணாரத்ன பரணவிதான (பா.உ.) / KARUNARATHNA PARANAWITHANA (M.P.)

විද්‍යා, තාක්ෂණ, පර්යේෂණ, නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය පුහුණු සහ කන්ද උඩරට උරුමය පිළිබඳ නියෝජ්‍ය අමාත්‍ය
விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்
Deputy Minister of Science, Technology, Research, Skills Development & Vocational Training and Kandyan Heritage

Vaishnavi, I wish you every success, satisfaction and happiness in your endeavour in the pursuit of this divine art " Bharathanatyam " and my special blessings for you on this great day of your life.

**KARUNARATHNA PARANAWITHANA**
DEPUTY MINISTER OF SCIENCE, TECHNOLOGY, RESEARCH,
SKILLS DEVELOPMENT & VOCATIONAL TRAINING AND KANDYAN HERITAGE

'නිපුණතා පියස', 354/2, ඇල්විටිගල මාවත, කොළඹ 05. 'நிபுணதா பியச', இல.354 2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha, Colombo 05.
Tel : 011 2136530 Fax : 011 2597784 E-mail : dmsdvt2017@gmail.com

# குருவின் ஆசிகள்



කෘෂිකර්ම අමාත්‍යාංශය
අංක. 288, ශ්‍රී ජයවර්ධනපුර මාවත,
රාජගිරිය.

கமத்தொழில் அமைச்சு
இல. 288, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வீதி,
ராஜகிரிய

Ministry of Agriculture
No.288, Sri Jayawardenapura Mawatha,
Rajagiriya.

**අංගජන් රාමනාදන් (පා.ම.)**
කෘෂිකර්ම නියෝජ්‍ය අමාත්‍ය

**அங்கஜன் இராமநாதன் (பா.உ)**
பிரதி கமத்தொழில் அமைச்சர்

**Angajan Ramanathan (M.P.)**
Deputy Minister of Agriculture

දුරකථන / தொலைபேசி / Telephone: 011-2077001, 011-2077661
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2077325
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: deputyminister@agrimin.gov.lk


# வாழ்த்துச் செய்தி



பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் நடனத்துறையில் சிறந்து விளங்கி கலைத்துறையில் சிறந்த களம் காண எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இளம் கலைஞர்களையும் அவர்களின் திறமைகளையும் உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டுகின்ற நிகழ்வாக இந்த அரங்கேற்றம் அமைகின்றது. பரதநாட்டியமானது எமது பாரம்பரிய கலைகளினை பறைசாற்றுவதாக அமைந்துள்ளதோடு, புலம்பெயர் தேசங்களிலும் எமது கலைகள் இக்கால தலைமுறையினரிடையே உயிரோட்டம் பெற்றுள்ளது. பிரபல்யமான பரதம், பாரத முனிவரால் உருவாக்கப்பட்டதால் இதற்கு - பரதம் - என்ற பதம் வந்ததாக கூறுவார். அதேவேளை பரதம் என்ற சொல் ப-பாவம், ர-ராகம், த-தாளம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகும்.

நமது பாரம்பரிய விவசாய தொழில் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் தமது ஓய்வு நேரங்களின் பொழுது கிராமிய பாடல்களுடன் ஆடல்களையும் வெளிப்படுத்துவார்கள். மரபுரீதியிலான கலைகள் நவீனத்துவ கலைகளிலும் நடன நயங்களை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளது.

நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் போன்ற மூன்று ஆடல் முறைகளையும் செவ்வனவே பயின்று அரங்கேற்றம் காணும் வைஷ்ணவி ஜெகரூபன் அவர்கள் கலைத்துறையில் இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக, சாதித்து சிறந்து விளங்கி மேன்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
பிரதி அமைச்சர் விவசாயத்துறை,
ஒருங்கிணைப்புக்குழு,
இணைத்தலைவர், யாழ். கிளிநொச்சி மாவட்டம்.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ.** Douglas Devananda, M.P. ඩග්ලස් දේවානන්දා, පා.ම.
**செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.** Secretary General, E.P.D.P. මහ ලේකම්, ඊ.පී.ඩී.පී.

## அரங்கேற்றம் சிறப்புற அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்!

எதிர்வரும் 2018 செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி நடைபெறவுள்ள செல்வி. வைஸ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வு மிகவும் சிறப்புற வேண்டும் என அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

செல்வி வைஸ்ணவியின் பாட்டி, திருமதி வி. சோமசூரியசிங்கம் அவர்கள் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளராகப் பணியாற்றியவர். எமது சமூகத்தில் நன்மதிப்பினைப் பெற்றுள்ள இவரது புதல்வி திருமதி ஜனீத்தா பரத நாட்டியக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் இத்துறையில் சிறப்பு பயிற்சிப் பெற்றவர். இந்தியாவின் தலைசிறந்த நாட்டியக் கலைஞரான 'பத்மபூசன்' வி. பி தனஞ்செயன் அவர்களது நாட்டியப் பள்ளியான, சென்னை, அடையார் 'பரத கலாஞ்சலியில்' பயின்றவர் என்ற பெருமை இவருக்குண்டு.

செல்வி வைஸ்ணவி தனது தாயின் வழிகாட்டலில் - நெறிப்படுத்தலில் பரத நாட்டியம் பயின்றுள்ளார். அந்த வகையில் செல்வி. வைஸ்ணவியும் இத்துறையில் தலை சிறந்து விளங்குவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இன்றைய எமது சமுதாயம் எமது பண்பாட்டு, கலாசார விழுமியங்களை விட்டு, விலகிப் போகின்ற ஒரு சூழ்நிலையில், செல்வி. வைஸ்ணவி போன்றவர்களின் ஆளுமைகள் எமது சமூகம் தொடர்பிலான ஒரு விதமான நம்பிக்கையினை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்றே எண்ணுகின்றேன்.

அந்த வகையில் செல்வி. வைஸ்ணவிக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களையும், அவருக்கு எனது ஆசிகள் என்றென்றும் உண்டு என்பதையும் தெரிவித்து, அவரது பெற்றோரையும் மனதார பாராட்டி விடைபெறுகின்றேன்.


நன்றி,

மக்கள் சேவையிலுள்ள,

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ.**
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

9/3, புகையிரத நிலைய வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04 தொலைபேசி 0112503467 தொலைநகல் 0112585255 Mobile - 0777781891
9/3, දුම්රියපොළ පාර, බම්බලපිටිය, කොළඹ - 04 දුරකතනය 0212229824 ෆැක්ස් 0212229883 Email - deva@slt.lk
9/3, Station Road, Bambalapitiya, Colombo - 04 Telephone Fax Website - epdpnews.com





தொலைபேசி
දුරකථන
Telephone
+94 21 2221877
+94 11 2360679

திருமதி. விஜயகலா மகேஸ்வரன். பா.உ.
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்
විජයකලා මහේෂ්වරන් මහත්මිය පා.ම.
යාපනය සහ කිලිනොච්චිය සම්බන්ධීකරණ කමිටුවල සම සභාපති
Mrs. Vijayakala Maheswaran, M.P.
Co-chairperson of Co-ordinary Committees of Jaffna and Kilinochchi

தொலைநகல்
ෆැක්ස්
Fax
+94 21 2221877
+94 11 2363591



# வாழ்த்துச் செய்தி

வைத்தியசாலை வீதி, தெஹிவளையை சேர்ந்த திரு.திருமதி ஜெகரூபன் ஜெனீத்திரா தம்பதிகளின் புதல்வி செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பரதநாட்டியம் என்பது எமது பாரம்பரிய ஆடற்கலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. இக் கலையானது பல்லாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட ஒரு சிறப்புமிகு கலையாகும். பரதநாட்டியக் கலையானது தென்னிந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்தில் தோற்றம் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இது ஒரு தெய்வீக் கலையாகும். இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் நடராஜர் வடிவிலேயே காட்சி தருகின்றமை இதற்கு நல்ல சான்றாகும்.

ஆரம்ப காலத்தில் பரதநாட்டியம் ஆலயங்களில் இடம்பெற்றாலும் இன்று உலகமெங்கும் வாழும் பலரும் இக்கலையை கற்று தேர்ச்சி பெறுகின்றனர். பரதநாட்டியமானது பாவம், இராகம், தாளம் மற்றும் நாட்டியம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு கலையாகும். இந்நடன நிகழ்வுகளுக்கு பக்கவாத்திய கருவிகளாக வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் மற்றும் வயலின் என்பன இணைக்கப்படுவது நாட்டியமும் இசையும் இணைந்து காதுகளுக்கும் கண்ணுக்கும் இனிமையையும் இரசனையையும் அமைதியையும் அளிப்பதற்கு துணையாகின்றது.

பரதநாட்டியக் கலையானது காலத்திற்குக் காலம் இந்தியாவில் தோன்றிய மாபெரும் நாட்டிய விற்பன்னர்களால் மென்மேலும் வளர்த்தெடுக்கப்பட்டு இன்று எமது நாட்டிலும் முக்கியம் பெற்ற ஒரு கலையாகத் திகழ்வது இந்நாட்டு கலைஞர்களின் அர்ப்பணிப்பை

வெளிக்காட்டுகின்றது. இத்தகைய சிறப்புமிகு இத் தெய்வீகக் கலையை இந்த இளம் வயதிலேயே கசடறக் கற்றுத் தேர்ந்து அரங்கேற்றம் என்கின்ற நிலையை அடைந்திருப்பது பெருமைப்படவேண்டிய ஒன்றாகும். இந்நாட்டிய தாகை இக்கலையில் மென்மேலும் சிறப்புத்தேர்ச்சி பெறவேண்டுமெனவும் இவ் அரங்கேற்ற நிகழ்ச்சி சிறப்புற நடந்தேற வேண்டுமெனவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுவதுடன் இவருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் குருவானவர்களுக்கும் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
*யாழ். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு*
*இணைத்தலைவர்.*

Consul-General

सत्यमेव जयते

## வாழ்த்துச் செய்தி

நுண் கலைகளுள் முதன்மையானதாக விளங்குவது நாட்டியக் கலை. ஆடல்வல்லான் நடராஜப் பெருமானால் உலகுக்கு அருளப்பட்ட தனிப் பெரும் கலையே பரதம் என்றால் அது மிகையாகாது. நவரசங்களையும் அபிநயங்களையும் கொண்டு காண்போரின் செவிகளுக்கும் கண்களுக்கும் இனிய விருந்தளிக்கும் அற்புதக் கலையாகும். பாரத நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டிலும் சரி இலங்கை மற்றும் தமிழ் மக்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் சிறப்பான முறையில் பயிற்றுவிக்கப்பட்டு இப் பரதக் கலை வளர்க்கப்பட்டு வருகின்றது.

அலாரிப்பு, ஜதிஸ்வரம், ஷப்தம், பதம், வர்ணம், தில்லான, கீர்த்தனை என பல்வேறு உருப்படிகளைக் கொண்டு முகபாவங்களையும் அதற்குப் பொருத்தமான அங்க அசைவுகளையும் தாளம் தவறாமல் வெளிப்படுத்துதல் என்பது இலகுவான செயல் அன்று. முறையாக குருவிடம் இக்கலையினைப் பயில்வதன் மூலமே சிறப்பான நடனக் கலைஞராக வரமுடியும் என்பது நிதர்சனமானது.

அந்த வகையில் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்கள் தமது இச் சிறிய வயதிலே இப் பரதநாட்டியக் கலைஞராக விளங்குவது அவரின் அதீத திறமையையும் கடின உழைப்பையும் வெள்ளிடை மலையாக எடுத்துக் காட்டுகின்றது. கொழும்பு சென் மெதடிஸ்ற் கல்லூரியில் தரம் எட்டில் கல்வி பயிலும் போதே அரங்கேற்றம் காணும் இவரின் கலை ஞானத்திற்கு எனது பாராட்டுக்கள். மாதா பிதா குரு தெய்வம் என்று சொல்வார்கள் . செல்வி வைஷ்ணவி ஜெகரூபனைப் பொறுத்த வரையில் அவரது தாயே குருவாக அமைந்தமை அவருக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். சிறுவயதில் இருந்தே இவரது தாயார் திருமதி யனித்திரா ஜெகரூபன் அவர்களிடம் முறையாக பரதம் பயின்று அரங்கேற்றம் காணும் செல்வி வைஷ்ணவியை மனதார வாழ்த்துவதோடு இத்தகைய இளம் நாட்டிய கலைஞரை கல்லில் இருந்து சிற்பம் செதுக்குவது போன்று வளர்த்தெடுத்த வைஷ்ணவியின் பெற்றோரையும் இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் பாராட்டுவதோடு செல்வி வைஷ்ணவி அவர்கள் தொடர்ச்சியாக நீண்டகாலம் இப் பரதக் கலையின் சிறப்பை வெளிப்படுத்தி உலகம் போற்றும் பரத நாட்டிய கலைஞராக பெயர் பெற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

அன்புடன்

ச பாலச்சந்திரன்
இந்திய துணைத் தூதுவர்
யாழ்ப்பாணம்


भारत का प्रधान कौंसलावास
१४ मारूथेडी लेन, नल्लूर, जाफना
दूरभाष संख्या : ००९४-२१-२२२०५०४/५०५
फैक्स संख्या : ००९४-२१-२२२०५०३/२२१९६७५
वेब : www.cgijaffna.org

Consulate General of India
14, Maruthady Lane, Nallur, Jaffna
Tel : 0094-21-2220504/505
Fax : 0094-21-2220503/2219675
Web : www.cgijaffna.org

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහනගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
පේදුරුතුඩුව පාර, යාපනය.
Point Pedro Road, Jaffna.

அலுவலகம் / කාර්යාලය / Office 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 222 2334
இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet www.jaffna.mc.gov.lk

# யாழ் மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி



உலகத்தின் அசைவு அனைத்தும் இறைவனின் திருநடனமாகும். இதுவே பரதம் என்னும் தெய்வீக கலையாகும். இதை திருமூலர் திருமந்திரத்தில் பின்வருமாறு விபரிக்கிறார்.

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாயிருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருட்டன் விளையாட்டதே"

பரதக் கலையை பயில்வோர் பாக்கிய சாலிகளாகும். இக்கலையில் பாண்டித்தியம் பெறுவோர் மிகவும் உன்னதமானவர். பரக்கலையை சாஸ்திரிக முறையில் கற்று அரங்கேற்றம் பெறும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சீராகவும் சிறப்பாகவும் அரங்கேற வேண்டுமென எல்லாம்வல்ல தில்லைக்கூத்தனை இறைஞ் சுகிறேன். அவன் அருள் என்றும் நிலைத்திருக்கும். இதுவே எனது பிரார்த்தனை.

செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் எதிர்காலத்தில் ஒரு கலையரசியாகத் திகழ்வார் என்பதில் எதுவித ஐயமில்லை. இவரின் கலைத்திறன் சிறப்புற வேண்டுமென வாழ்த்தி இவரைப் பெற்றெடுத் பெற்றாரை வாழ்த்தி இத்துடன் இக்கலையைக் கற்றுக்கொடுத்த ஆசிரியரையும் மனதார வாழ்த்துகிறேன்.

**கௌரவ இம்மனுவல் ஆனல்ட்**
முதல்வர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහනගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். පේදුරුතුඩුව පාර, යාපනය. Point Pedro Road, Jaffna.
அலுவலகம் / කාර්යාලය / Office 021 222 2275
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 222 2334
இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet www.jaffna.mc.gov.lk

# யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் ஆசிச் செய்தி

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் சிறுபராயத்திலிருந்து கலைகளில் ஈடுபாடு செலுத்தி அவற்றைக் கற்று வருவது அவர்களின் சிந்தனைகளில் பிறழ்வுகள் ஏற்படாதவண்ணம் முழுமையாக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பாக உள்ளது. கலைகளை பயில்வது மட்டுமல்லாது அவற்றை முறைப்படி பயின்று அவையோர் முன்னிலையில் ஆற்றுகையாக அரங்கேற்றம் செய்வது உண்மையிலேயே சிறப்பானதொரு விடயமாகும். அந்த வகையில் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் பரதநாட்டியக் கலையை தனது தாயாரான திருமதி. ஜனித்ரா ஜெகரூபன் அவர்களையே குருவாகக் கொண்டு பயின்று அரங்கேற்றுவது சிறப்பான விடயமாகும். எனவே இவர் மேன்மேலும் பரதக் கலையில் சிறந்து விளங்குவதற்கும் ஏனைய கல்விச் செயற்பாடுகளில் உயர்ச்சி பெறவும் ஆசிகூறி அவரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் பெற்றோருக்கும் எனது வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

**இ.த. ஜெயசீலன்,**
ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone: 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone: 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது எண் / My No.: GA/JF/VN/03

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 03-08-2018

# Message from Government Agent



I am so proud of you for all of your hard work and determination to learn Bharatanatyam. This classical dance practice involve dedicaton, hard work, passion for perfection and skill. I am sure that your performance will awake a lot of parents to see what is that they can do to sustain and proliferate this divine art to enable their children to excel in it as much as. They do in every aspects of the life.

Bharatanatyam dancing is an artistic discipline of high order, which embodies man's devotion to God and opening of his heart to beauty and joy, expressed through high stylistic and graceful gesture of body. It convey all the importents elements necessary to live life to its full glory, awakened mind, theme and discipline.

So the achievement of Arangetram signifies more than an acquirement of certain skills in the performing art. It is a long immersion in the art an science of living and an anointment of matured personality. My congratulation to Miss J. Vaishnavi on the a special performance and best wishes in her future endeavours.

Thanking you.

**N. Vedhanayagan**
District Secretary / Government Agent,
District Secretariat,
Jaffna.

නැවත පදිංචි කිරීම, පුනරුත්ථාපන, උතුරු සංවර්ධන හා
හින්දු ආගමික කටයුතු අමාත්‍යාංශය
மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு
Ministry of Resettlement, Rehabilitation, Northern Development
and Hindu Religious Affairs
අංක 356 B, ගාලු පාර, කොළඹ 03. இல. 356 B, காலி வீதி, கொழும்பு 03. No. 356 B, Galle Road, Colombo 03.

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தலைத்தோங்கும் வட இலங்கையில் காலத்திற்கு காலம் கலைகளை வளர்ப்பதில் பல கலைஞர்கள் சீரிய பங்காற்றி வந்துள்ளார்கள். அந்தவகையிலே எதிர்வரும் 02-09-2018ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் தனது அரங்கேற்றத்தினை ஆற்றுகைப்படுத்தவுள்ள செல்வி. வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன்.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளை மட்டுமன்றி தென்னிந்திய கலைகளை எமது நாட்டில் பரம்பரையாகவும், ஆர்வத்தின் மூலமாகவும் பயின்று அவற்றை அழியவிடாது கலைப்பணியாற்றிவரும் எம் நாட்டுக் கலைஞர்களுக்கு அரசாங்கமானது பிராந்திய மற்றும் பிரதேச அரச நிறுவனங்கள் வாயிலாக விருதுகளை வழங்கி கௌரவிப்பது வரவேற்கத்தக்கதாகும். இதேபோல பிரதேச கலைமன்றங்களும் கலைஞர்களைக் கௌரவிப்பதன் மூலமாக கலைகளுக்கு உரமூட்டி வருகின்றன. இவ்வாறு பெருமைக்குரிய கலைஞர்கள் தாம் கற்ற கலைகளை தமக்குப் பின்னர் வரும் சந்ததியினருக்கு பயிற்றுவிப்பது மிகச்சிறந்த சேவையாகும். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பல சமூக சேவைகளை ஆற்றிவரும் திருமதி. சோமசூரியசிங்கம் அவர்களின் பேர்த்தி செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்கள் எமது மண்ணில் தெய்வீகக் கலையாம் பரதக்கலையை வளர்க்கும் பணியில் ஈடுபடவுள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும். இவர் மிகவும் இளம் வயதிலே பரதக்கலையை பயில்வதற்கு அவரது பெற்றாரும் உறவினர்களும் உறுதுணையாக இருந்துள்ளமைபாராட்டப்படவேண்டியதாகும்.

எனவே யாழ்ப்பாண மண்ணில் தனது அரங்கேற்ற நிகழ்வினை நடாத்தவுள்ள செல்வி. வைஷ்ணவி ஜெகரூபன் எதிர்காலத்தில் பல பயிற்சிகளைப் பெற்று தலைசிறந்த பரதநாட்டிய கலைஞராக மிளிர்வதற்குரிய அருட்கடாட்சத்தினை வழங்கவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொள்வதோடு செல்வி. வைஷ்ணவி ஜெகரூபனின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு இனிதே இடம்பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**பா. செந்தில்நந்தனன்**
மேலதிக செயலாளர்

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

## ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **President:** | **General Secretary:** | **Hony. Treasurer:** |
| மாணிக்கம் தவயோகராஜா | வேலுப்பிள்ளை கந்தசாமி | அ.கயிலாசபிள்ளை |
| *Manikkam Thavayogarajah* | *Velupillai Kandasamy* | *Abirami Kailasapillai* |
| *Phone: 2695120 (Res)* | *Phone: 2586620 (Res)* | *Phone: 2575566 (Res)* |
| *Mobile: 0777786686* | *Mobile: 071-5349150* | *Fax : 2575472* |
| *mthavam@gmail.com* | *vkandasami@gmail.com* | *hariomak@gmail.com* |


## வாழ்த்துச் செய்தி

சங்ககாலந்தொடடுத் தமிழர் பண்பாட்டில், இயல் - இசை - நாடகம் என்ற, முத்தமிழும் போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றது. இவற்றுள், பரமசிவனாரால் அருளப்பட்ட பரதக் கலைக்கு எம்மவர் மிகுந்த மதிப்பளித்து முக்கிய இடத்தை வழங்கி வந்துள்ளனர். அந்தத் தெய்வீகக் கலை, தொன்றுதொட்டு எமது வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாக இன்றுவரை உள்ளது.

புராதன காலந்தொட்டு பண்ணும் பரதமும் தமிழரின் இருகண்களாகப் போற்றப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையல்ல.

பரதம், மனதிற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் அளிப்பது மட்டுமல்ல, எமது வாழ்வை பக்தி நெறியில் சீரமைப்பதற்கும் ஒரு கருவியாகத் திகழ்கின்றது. பரதத்தில் உள்ள பாவம், லயம், இசை என்பன ஒருசேர அமைந்து ஆற்றுகையாக வெளிப்படுத்தப்படும்போது மனமும் தெய்வீக சுகானுபவத்தில் திளைக்கின்றது. இந்த உணர்வு ஆழ்மனதில் தெய்வீக உணர்வை மேம்படச்செய்கின்றது.

இன்றைய நாகரிக காலத்திலும், அதனுள் மூழ்கித் தறிகெட்டுவிடாது, எமது இளந் தலைமுறையினர், ஏதோவொரு கலையைக் கற்க வேண்டும். அந்த வகையில் பல இளந்தலைமுறையினர் பரதக் கலைக்கு அளித்துவரும் முக்கியத்துவத்தினைக் காணும்போது, எதிர்காலத்திலும் அழிவுறாது போற்றி வளர்க்கப்படும் என்பது மனதிற்கு சற்றே ஆறுதலைத்தருகின்றது.

அந்த வகையில், வைத்தியகலாநிதி ஜெகரூபன் , ஜெனீத்ரா தம்பதியினரின் மகளாகிய செல்வி வைஷ்ணவி அவர்களின் பரத அரங்கேற்றமும் பாராட்டப்படவேண்டியதாகும். யாழ்ப்பாணம், சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள, சரஸ்வதி மண்டபத்தில் 02-09-2018 அன்று நடைபெறவுள்ள செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரத அரங்கேற்றத்திற்குப் எல்லாம்வல்ல பரம்பொருளின் ஆசிகளை வேண்டுவதுடன், எமது உளம்நிறைந்த வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றோம். செல்வி வைஷ்ணவி அவர்களுக்கு செம்மையுற பரதக்கலையினைக் கற்பித்த ஆசிரியைக்கும், ஊக்கமளித்துத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வைஷ்ணவி அவர்களின் பெற்றோருக்கும் இந்த வேளையில் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

செல்வி ஜெ. வைஷ்ணவி அவர்கள் எதிர்காலத்தில் பரதக்கலையின் பல்வேறு நுணுக்கங்களையும் கற்று மேலும் பல பரத அளிக்கைகளை நிகழ்த்தி கலையுலகிற்கும் தமிழ்-சைவ உலகிற்கும் பெரும் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

மா.தவயோகராஜா
தலைவர்

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்


தலைமையகம்: இல.91/5,சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர்மாவத்தை,கொழும்பு– 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax : 2344720
hinducongress@gmail.com

# வாழ்த்துரை



*செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களினது 02-09-2018 அன்று நடைபெறவுள்ள பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*செல்வி வைஷ்ணவி, பரதநாட்டியத்தினை முறையாகக்கற்று, அரங்கேற்றவுள்ளார். செல்வி வைஷ்ணவி தொடர்ந்து பரதநாட்டியத்தில் தேர்ச்சிபெற்று நாட்டிய தாரகையாகத் திகழ வாழ்த்துகின்றேன்.*

**பேராசிரியா இ. விக்கினேஸ்வரன்**

*துணைவேந்தர்,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# அரங்கேற்றம் சிறக்கட்டும்

**– கம்பவாரிதி இ. ஜெயராஜ் –**



உலகின் மூத்த மொழிகளுள் நம் தமிழ்மொழியும் ஒன்று.
இயல், இசை, நாடகம் என முக்கூறாய் விரிந்த நம் தமிழ்,
பயில்வாரைப் பரமனிடம் சேர்ப்பிக்கும் வல்லமை கொண்டது.
அவற்றுள் இயலையும், இசையையும் உள்ளடக்கிய நாடகத்தமிழ்,
எல்லோரையும் ஈர்க்க வல்லது.
பாவம், ராகம், தாளம் எனும்,
மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களால் அமைந்த பரதக்கலை,
பரதமுனிவரால் உலகிற்குத் தரப்பட்டது.
உள்ளத்தின் உணர்வுகளை உடல் வெளிப்படுத்துவது இயற்கையே.
அவ்வியற்கை உண்மைகளை கூர்ந்து அவதானித்து,
அமைக்கப்பட்டதே நம் பரதக்கலையாம்.

● ● ● ●

இவ்வரிய கலையைக் கற்க,
முன்னைத்தவப்பயன், தோற்றப் பொலிவு, ஆற்றல், ஆர்வம், சலியா மனப்பாங்கு,
விடாமுயற்சி, தொடர்ந்த பயிற்சி, உளம் ஒன்றும் தன்மை என்பவற்றோடு,
சிறந்த குரு, தகுந்த பெற்றோர் எனப் பல தகுதிகள் தேவை.

● ● ● ●

செல்வி வைஷ்ணவிக்கு தாயாரே குருவாய் அமைந்தது,
அவரின் தவப்பயனேயாம்.
ஈழத்தில் நாட்டிய மரபில் பெருமையோடு பெயர் பதித்த,
திருமதி கிருஷாந்தி ரவீந்திராவிடமும்,
தமிழ் நாட்டில் புகழ்பெற்ற நாட்டிய மேதை தனஞ்சயனிடமும்,
நாட்டியத்தைப்பயின்ற வைஷ்ணவியின் தாயார் திருமதி ஜனேத்திரா ஜெகரூபன்,
தனது மகளை பன்னிரண்டு வயது நிரம்பும் நிலையில்,
அரங்கேறும் அளவிற்கு தயார் செய்திருப்பது பாராட்டத் தகுந்த ஒன்றே.

● ● ● ●

வைஷ்ணவியின் தந்தையார் டாக்டர் ஜெகரூபன்,
வைத்தியத்துறையில் மட்டுமன்றி,
பேச்சுத் துறையிலும் கவிதைத் துறையிலும் ஆற்றல் மிக்கவர்.
பல ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் கம்பன் மேடையில் அவர் ஏறியிருக்கிறார்.
தந்தை, தாய் இருவரதும் கலைஆர்வம் மகளை,
இவ் இளவயதில் நாட்டியத் தாரகையாகியிருப்பது மகிழ்வுதரும் செய்தியாம்.

● ● ● ●

இவர்தம் குடும்ப முயற்சியால் நல்லபடி அரங்கேற்றம் அமையுமென நம்பலாம்.
இறையருளும் முழுமையாய்ப் பாலிக்க,
என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் திருவடிபணிந்து வாழ்த்துகிறேன்.
'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'

# வாழ்த்துரை



வைத்தியக் கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபன் திருமதி ஜெகரூபன் ஜெனித்திரா தம்பதிகளின் செல்வப்புதல்வி வைஷ்ணவி அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கொழும்பு மெதடிஸ் கல்லூரியின் மாணவியான செல்வி வைஷ்ணவி சிறு வயதிலிருந்தே பரதநாட்டியத்தில் ஆர்வம் கொண்டிருந்தமையை நான் நன்கறிவேன். அவரது தாயார் ஜெனித்திரா அவர்கள் பரதநாட்டியத்தில் புகழ் படைத்த ஒருவர் என்பதை அவர் பிறந்த ஊரான கோண்டாவில் மக்கள் மட்டுமல்ல, தேசிய மட்டத்திலேயே அவர் சாதனை படைத்திருப்பதனை எல்லோரும் அறிவர். அவரது பரம்பரையில் தோன்றிய செல்வி வைஷ்ணவி இன்று பரதநாட்டியத்தில் ஆர்வம் மிக்கவராக, அதன் நுட்பங்களை நன்கு கற்றுத் தேறியவராக அரங்கேற்றம் காணவிருப்பது கண்டு எம் ஊர் மக்கள் பெருமகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

கலைக்குடும்பமான திரு.திருமதி. சோமசூரியசிங்கம் தம்பதியினரின் மகள் ஜெனித்திரா அவர்கள் பரதக்கலையைக் கற்று அதில் அரங்கேற்றம் கண்டமையை நான் எண்ணிப் பார்க்கின்றேன். அவரது பரதநாட்டியத்தின் திறமையைக் கண்டு இணுவில் கலாமாமணி வீரமணி ஐயரால் "பரததாரகை" எனும் விருத வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை நம் எல்லோர் மனக்கண் முன் நிற்கின்றது. அதுமட்டுமன்றி இணுவில் பொது நூலகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் முன்னாள் இந்துகலாசார அமைச்சர் கௌரவ மகேஸ்வரன் அவர்களால் "நாட்டிய தாரகை" எனும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மொத்தத்தில் செல்வி வைஷ்ணவி அவரது தாயார் ஜெனித்திரா அவர்கள் நிகழ்த்திய சாதனைகளின் தொடர்ச்சியை நிலைநிறுத்துவார் என்பதில் சந்தேகமில்லை. தாயாரிடம் இக்கலையைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமை செல்வி வைஷ்ணவிக்கு கிடைத்த ஒரு பெரும் பேறாகும்.

திரு. திருமதி. ஜெகரூபன் ஜெனித்திரா தம்பதிகளின் புதல்வி வைஷ்ணவி எட்டாம் ஆண்டிலேயே பரதநாட்டிய அரங்கேற்றம் காண்பது எமக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் வட இலங்கை சங்கீத சபையின் 3ம் தரப் பரீட்சையிலும் அவர் சித்திபெற்றிருப்பது அவருக்கு பரதநாட்டியத்தின் மீதிருக்கும் ஆளுமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இச்சிறு வயதில் அவர் காட்டிவரும் பரதநாட்டியத்தின் மீதான ஆர்வம் அவரது எதிர்காலத்தில் மிகப்பெரும் சாதனையாளராக மாற்றும் என்பதில் சந்தேகமில்லை. அவர் எல்லாம்வல்ல இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அருளால் பரதநாட்டியத்தில் சாதனை படைத்து பல பட்டங்களைப் பெற்று எமது ஊருக்கும், தமிழ் சமூகத்துக்கும் புகழ் சேர்க்கவேண்டுமென வாழ்த்தி எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா**
தலைவர்,
சுற்றுலாப் பணியகம்,
வட மாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



கடவுளின் அற்புதம் இயற்கை. இயற்கையின் அற்புதம் மனிதன் முதலான ஜீவராணிகள். இந்த ஜீவராசிகளுக்கு பிரதான அம்சமாகத் திகழ்வது கண்கள். இந்த வகையில் பரதத்துக்கு இரு கண்கள் போல் திகழ்பவை அபிநயமும் ஆடலுமாகும். அபிநயம் தாயுக்கும் ஆடல் தந்தைக்கும் ஒப்பானதாகக் கூறப்படுகின்றது.

இறைவனால் படைக்கப்பட்ட நடனக்கலையை மனிதன் தான் மகிழ்ந்திருப்பதற்காக ஆற்றுகை செய்வதுடன் மட்டுமல்லாது இறைவனை மகிழ்விப்பதற்காகவும் மனிதர்களால் அர்ப்பணிப்புடன் நடன ஆற்றுகை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறான தெய்வீகக் கலையானது முன்னோர்களால் மிகவும் சிறப்பான முறையிலே செப்பனிடப்பட்டு உலகிலே உள்ள வேற்று மதத்துவர்களும், வேற்று இனத்தவர்களும் விரும்பிக்கற்று, இக்கலையின் தத்துவங்களை உணர்ந்து இன்புற்று இருப்பதற்கு ஏதுவாகத் திகழ்கின்றது.

இவ்வாறான உலகப்புகழ்பெற்ற தெய்வீகக் கலையில் நாட்டம் கொண்டு சிறப்புறப் பயின்று இன்று அரங்கிலே அரங்கேற்றம் செய்கின்ற செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் இன்றைய அரங்குடன் நின்றுவிடாது மேன்மேலும் இக்கலையில் பூரணத்துவம் அடைந்து சிறந்த ஒரு நர்த்தகியாகத் திகழவேண்டுமென தில்லைக்கூத்தன் நடராஜப் பெருமானை வேண்டி, வைஷ்ணவிக்கு எனது ஆசிகளையும் வழங்குகின்றேன்.

**க.க. அருள்வேல்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

"ஸ்ரீபவனம்"
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

# UNIVERSITY OF JAFFNA

## *DEPARTMENT OF HISTORY*

**PROF.SELLIAH KRISHNARAJAH., M.A.**
*PROFESSOR IN HISTORY*
*(ANCIENT HISTORY & ARCHAEOLOGY)*

**KALADDY LANE, KONDAVIL WEST.**
*Hand Phone - 0777283618*
*skrishna514@gmail.com Home- 021 205 3321*

## Bharatanatyam – A Metaphysical way of Consolidation among the Deviated Societies.



I am glad to send this message to the Souvenir that is being published in connection with the Bharatanatya Arangetram of Vaishnavi Jegaruban, daughter of Dr. Mr & Mrs V.Jegaruban of Dehiwala. Selvi Vaishnavi has learned Bharatanatyam from her mother and her mother Mrs. Jeneethira Jegaruban learned this devotional art from Mrs. Chrishanthy Raveendra, and eminent academician in Bharatanatyam at the University of Jaffna. This is an occasion in which the traditions and generations are being amalgamated with art performance. Selvi Vaishnavi is contributing in connecting art with younger generatons. So, I am wishing and blessing to Selvi Vaishnavi for ber Bharatanatya Arangetram and also wishing to ber Teacher cum mother Mrs. Janeethira Jegaruban who has shown much interest in growing generations with artistic norms. Further I would like to wish to those who cherish this occasion with Selvi Vaishnavi.

Historically, Bharatanatyam is the dance-form christened and thrived in the south of India. Then it spread to other parts of the country. Now it is a world art and heritage, flourishing particularly in the Indian diaspora. The Shiva – Nataraja, symbol of Bharatanatyam, has been embeded at the NASA – Space Science Center where it is deemed as the Center of the Universe as stated by Kalayogi Ananda K. Coomaraswamy in his great work, The Dance of Shiva.

I believe that this traditional and identical art permormance will bring the spiritual and philosophical inspirations for each. The attainment of humanism through spiritual performance has been one of the units which stabilizing the social harmony in this country.

Thank you,

**Professor Selliah Krishnarajah**
University of Jaffna.

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, නල්ලූර්
பிரதேச செயலகம், நல்லூர்
**Divisional Secretariat, Nallur**


පොදු දුරකථන / ෆැක්ස් අංකය
பொதுத் தொலைபேசி/தொலைநகல் இல:
General Telephone/Fax No: 021 222 2208

ප්‍රාදේශීය ලේකම් / பிரதேச செயலர் / Divisional Secretary — Tel: 021 222 9801, e-mail: ds@nallur.ds.gov.lk

සහකාර ප්‍රාදේශීය ලේකම් / உதவி பிரதேச செயலர் / Asst. Divisional Secretary — Tel: 021 221 7215, e-mail: ads@nallur.ds.gov.lk

ගණකාධිකාරී / கணக்காளர் / Accountant — Tel: 021 222 1057, Fax: 021 222 1057, e-mail: acc@nallur.ds.gov.lk

සහකාර අධ්‍යක්ෂ - සැලසුම් / உதவித் திட்டமிடல் பணிப்பாளர் / Asst. Director of Planning — Tel: 021 222 9962, Fax: 021 222 9962, e-mail: adplan@nallur.ds.gov.lk

පරිපාලන නිලධාරී / நிர்வாக உத்தியோகத்தர் / Administration Officer — Tel: 021 205 4064

දිවිනැගුම කළමණාකරු / வாழ்வெழுச்சி முகாமையாளர் / Divineguma Manager — Tel: 021 222 1058


# Blessing Message from Divisional Secretary, Nallur.

I have great pleasure to pen this message for Miss. Vaishnavi Jegaruban on her debut of Bharatanatyam on the 2nd of September 2018. Her endeavour in learning the skills of this classical dance and her confidence to perform same on stage, in such a young age of 12 years, must really be appreciated. I hereby convey my blessings to Vaishnavi perform the debut successfully as well as beautifully and wish her a bright future.

**E. Anton Yoganayagam**
Divisional Secretary,
Nallur.

# Message of Mrs. Nalini Balasubramaniam
# Divisional Secretary, Dehiwala

It is my great pleasure to make a note in this publication on the debut Dance Arangetram of Ms.Vaishnavi Jegaruban.

There is no doubt that Ms. Vaishnavi Jegaruban is a very talented and enthusiastic dancer and I am sure her 'Dance Arangetram' will be a milestone in ensuring the highest standards in this art.

Now a days our children spend their time mostly in social Medias. It isolates them from the family, friends, relatives & society. It leads them to a violent behavior. They don't have any time to think their own and find things creatively and innovatively. Just they wasting their time by using and enjoying the existing facilities & technologies. But if they involve with art, they will be good citizens in future. Art can make them perfect with kindness, love, talents and discipline. Actually Art & Literature gives us pleasure, relaxation, happiness, peace, stress free life etc..

Accordingly I am very proud of her and her parents for their interest and the involvement in Dance which helps physically and mentally healthy life in all aspects. I wish her parents, Teachers, Grand Parents and all other supporters who work hard for the grand success of this 'Arangetram' the very best in this and all their other endeavors.

I congratulate and wish again for her great achievement. God bless.

**Nalini Balasubramaniam SLAS-1, MSC (HRM)**<br>
Divisional Secretary,<br>
Dehiwala.

# அரங்க அணிசேர் கலைஞர்கள்



**நட்டுவாங்கம் -**

நாட்டிய கலைமணி,
பரத தாரகை,
நாட்டிய தாரகை

**ஸ்ரீமதி ஜனீத்திரா ஜெகரூபன்**



**பாட்டு - ஸ்ரீமதி. ஹேமவதி கபிலதாஸ்**

கொழும்பு இசிபத்தானை கல்லூரியில் இசை ஆசிரியையாகப் பணிபுரியும் திருமதி. ஹேமவதி கபிலதாஸ் அவர்கள் சங்கீத கலாவித்தகரும் சங்கீத டிப்ளோமாதாரியுமாவார். ஆசிரிய உயர் விருதான குரு பிரதீபா விருது பெற்ற இவர், ஈழத்தின் சிறந்த கலைஞர்களுள் ஒருவராவார்.



**பாட்டு - அழகேசன் அமிர்தசிந்துஜன்**

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக தற்காலிக விரிவுரையாளராக விளங்கும் அழகேசன் அமிர்தசிந்துஜன் அவர்கள் கர்நாடக சங்கீத நுண்கலைமாணியாவார். வட இலங்கை சங்கீத சபையினூடாக கர்நாடக சங்கீதம், பண்ணிசை, மிருதங்கம் ஆகியவற்றில் கலாவித்தகர் பட்டம் பெற்றவர். இவர் கர்நாடக கச்சேரிகளை தனிப்பட்ட ரீதியிலும் இசை நிகழ்வுகளை சகோதரர் அ. அமிர்தலோஜனுடனும் இணைந்து நடாத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.



**வயலின் - அம்பலவாணர் ஜெயராமன்**

சுருதிவேந்தன் எனும் கௌரவ மகுடத்தோடு வலம்வரும் அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் ஈழத்தின் புகழ்பூத்த வயலின் கலைஞர்களுள் ஒருவராவார். இறுவட்டுக்கள் தொடர்பான இசையமைப்பில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகிறார். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலரது நிகழ்விலும் சிறந்த அணிசேர் கலைஞராகத் திகழ்ந்து வருகிறார்.



**மிருதங்கம் - கணபதிப்பிள்ளை கஜன்**

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை விரிவுரையாளராக விளங்கும் கணபதிப்பிள்ளை கஜன் அவர்கள் ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர் க.ப. சின்னராசா, திருவாரூர் கலைஞர் பக்தவத்சலம் ஆகியோரிடம் மிருதங்கம் பயின்ற சென்னை பல்கலைக்கழக முதுகலைமாணியும் ஆவார்.



வீணை –

இலங்கையில் வீணைக் கச்சேரியையும் பக்கவாத்தியக் கலையையும் மேற்கொண்டுவரும் சிறந்த கலைஞர்களுள் ஒருவர். இலங்கை, இந்திய திரைப்பட இசையமைப்புக்களிலும் பங்காற்றியவர். சக்தி TV, M TVயின் சிறந்த பாடகர் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியவர். தற்போது தொலைக்காட்சி தயாரிப்புகளிலும் கலை நிகழ்வுகளிலும் பணிபுரிந்து வருகின்றார். இலங்கை உயர்கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட "Talent" இசைப் போட்டியில் நடுவராகவும்பயிற்றுவிப்பாளராகவும்பணியாற்றியவர்.



**சாயிபாயா – மு. கண்ணன்**

ஈழத்து இசையுலகின் மகுடமென வலம் வருபவர் பிரபல இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் அவர்கள். நூற்றுக்கணக்கான எழுச்சிப்பாடல்கள், பக்திப்பாடல்கள் என இசையமைத்த பெருமைக்கு உரியவர். இன்று இசைத்துறையில் பிரகாசிக்கின்ற பலர் இவரது மாணவர்களாகத் திகழ்கின்றமை தனித்துவமான அம்சமாகும்.



**தம்புரா – திருமதி பதுமினி வாகீசன்**

யா/ சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி. பதுமினி வாகீசன் அவர்கள் சிறந்த இசைக் கலைஞர் ஆவார்.

# நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்



பரா. றமேஸ்



தர்மினி ரஜீவன்

# அரங்க ஒழுங்கமைப்பாளர்கள்



மண்டபம் – திரு. சின்னராசா சண்முகானந்தா
உரிமையாளர் - சரஸ்வதி. ஹம்சிகா மண்டபங்கள்



ஒளி அமைப்பு – திரு. மனோகரன்



ஒலி அமைப்பு – திரு.கோ. சத்தியன்

வீடியோ – போட்டோ சிறி

படப்பிடிப்பு – திரு. தேவன் – றெக்ஸ் ஸ்ரூடியோ
திரு. மோகன் – சிவம் போட்டோ
லது வீடியோ – இணுவில்.

JAFFNA JAIPUR CENTRE FOR DISABILITY REHABILITATION
NO.05, OLD PARK ROAD, CHUNDIKULI, JAFFNA.
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல.05. பழைய பூங்காவீதி. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
E-mail: jaipurj@sltnet.lk , Website: www.jjcdr.com
Regd No: L/25716 & MSS/NSPD/R/174 Tel. No.: 021 222 2574

# வாழ்த்துச் செய்தி

ஆடற்கலை அருகிவரும் இந்நாளில் அக்கலையில் முன்னர் ஈடுபட்டு பெயரையும் புகழையும் ஈட்டிய திருமதி வ. சோமசூரியசிங்கம் அவர்கள் தாம் பெற்ற ஆற்றலையும் அனுபவத்தையும் துணையாகக் கொண்டு பரதக்கலையை பிரபல்யமடையச் செய்வதற்கான பணியில் தமது பேத்தியை இணைத்து அரங்கேற்றம் செய்வதற்கான அவரது முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

மிக இளவயதில் அரங்கேறி நாட்டியக்கலையில் கால்பதிக்கும் செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் அவர்கள் எதிர்காலத்தில் புகழ்பூத்த ஆடற்கலை யரசியாகவும் திகழவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி**
கௌரவ தலைவர்,
ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.

Dear Vaishnavi,

I am very happy that you have planned to have your Bharatanatya Arangetram in Jaffna is also called Sivapoomi, the land of Lord Siva, shoes never ending Cosmic dance is represented as Bharatanatyam. "He" as Nadarajah, the King of Dance – Lord of the never ending motion of souls – will be on stage, blessing you as you perform.

You are blessed to be taught dancing by your mother, who is also a qualified, well trained, accomplished dance teacher. The 'dance gene' is in you! Your father is a dedicated doctor performing great service to the affected population in the field of Mental Health. Your Bharatanatya Arangetram will be physically invigorating and mentally stimulating combining Bhaavam, Raagam and Thaalam to all those attending the performance.

May the Almighty Lord Nadarajah bless you with Health, Happiness, Well-being, Long life to attain your goals.

We have known your parents and grand parents for a long time.
Make your parents feel proud to have you as their daughter, and the grand parents happier.
"Eenra Poluthil perithuvakkum than makalai saantrol enak ketta thaai"
"Makal Thanthaikkaatrum uthavi ival thanthai en notraan kol enum sol"

Modified for gender equality!

**Dr. C.S. Nachinarkinian,**
Kokuvil.
August 2018

# வாழ்த்துச் செய்தி

ஆயகலைகள் அறுபத்தி நான்கினுள் ஒன்றாகிய நாட்டியக்கலையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அருகிவரும் இன்றைய காலகட்டத்தில் அத்துறையில் புகழ்பூத்து விளங்கிய திருமதி. வ. சோமசூரியசிங்கம் அவர்க் தமது குடும்ப அங்கத்தவர் ஒருவரை நாட்டியத்துறையில் ஈடுபடவைத்த பெருமை அவரையே சாரும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதுபோல இளமைப் பருவத்தில் ஆடற்கலையைப் பயின்று அரங்கேறும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்கள் நாட்டியக்கலையில் பெயரும் புகழும் எய்திட வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

**டாக்டர் திருமதி செ. தெய்வேந்திரன்**
ஓய்வுநிலை மயக்கமருந்து வைத்திய நிபுணர்,
80, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி

செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று நடைபெறுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பல்லாண்டுகளுக்கு முன் வைஷ்ணவியின் அன்னை ஜனீத்திராவின் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்பியது என் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்திருக்கிறது.

செல்வி வைஷ்ணவி தனது அருமை அன்னையிடமே பரதக் கலையைச் செவ்வனே பயின்று இன்று அரங்கேற்றம் செய்வது மிகவும் போற்றத்தக்க, பெருமைப்படத்தக்க விடயமாகும். "தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை" என்பது தமிழ் முதுமொழி. அதற்கேற்ப ஜனீத்திராவினதும் வைஷ்ணவியினதும் சிறந்த முயற்சியைப் பாராட்டுகிறேன். பரதக்கலை தமிழர்களின் பண்டைய கலையாகும். அது இந்தியாவின் நடனங்களிலே மிகவும் சிறந்தது என்பது மேலை நாட்டுக் கலை மேதைகளின் ஒருமனதான அபிப்பிராயமாகும். 2000-ம் ஆண்டுகளுக்கு மேலாகப் பரதக்கலை தமிழ் நாட்டில் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என்பது பிரமிக்கத்தக்க உண்மையாகும்.

"ஆயகலைகள் அறுபத்து நான்கும் இசைந்துடன் போக" என்பது சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளின் திருவாக்கு. தமிழர்களின் அறுபத்து நான்கு கலைகளில் "பண்ணும், பரதமும், பண்புள்ள நாடகமும்" மிகவும் சிறந்தவை என்பது அறிஞர்களின் கருத்து. இத்தகைய பரதக்கலையைச் செவ்வனே கற்று அரங்கேற்றம் செய்வது எளிதான செயலல்ல. அரங்கேற்றம் செய்வதற்கு விடாமுயற்சியும், மனக்கட்டுப்பாடும் அத்தியாவசியம். வைஷ்ணவியின் அருஞ்செயலை மனமாரப் போற்றுகிறேன். அவருக்கு எனது நல்லாசிகள் உரித்தாகும். அவரது அருமைப் பெற்றோருக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய அரங்கேற்றம் இனிதே நடைபெற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**அன்புடன்**

**வைத்திய கலாநிதி ம. இராசநாதன்**

# PRINCIPAL'S MESSAGE



It is a pleasure to give this message on the occasion of the Bharatanatya Arangetram of Vaishnavi Jegaruban, who is a student in Grade 8 at Methodist College.

Bharatanatyam is a classical dance form that requires years of training to master. It is an extremely artistic discipline and embodies man's affinity to God and the opening of his heart to joy and beauty. It is encouraging to note that many parents still want their daughters to pursue this art form, even in the modernized world that we live in today, where western culture is so popular among the younger generation. An arangetram is not only about mastering the skills required by the dance form, but also signifies the maturity and development of the performer. It is commendable therefore, that such a young pupil of this dance form is able to reach the level of expertise required for a performance such as an arangetram. I know that the regorous training Vaishnavi has received, along with the discipline and commitment that is necessary to excel in this art form will provide her with a good foundation for life itself.

I wish her well for today's performance and for all her future endeavours.

Mrs. H. Fernando

# வாழ்த்துக்களும் ஆசிகளும்

திருமதி. ஜனீத்ராஜெகரூபனின் செல்வப் புதல்விசெல்வி. வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் பரதநாட்டியஅரங்கேற்றம் 02.09.2018 அன்று நடைபெறவிருப்பதனைமுன்னிட்டுஇவ்வாழ்த்துச் செய்தியைவழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இற்றைக்கு 25 வருடங்களிற்குமுன் ஜனீத்ராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் அரங்கேறும் முதல் நடன அரங்கேற்றமாகமிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நடைபெற்றதனை நினைவு கூர்கிறேன். அன்றைய இக்கட்டான காலப்பகுதியிலும் ஜனீத்ராவின் விடாமுயற்சி, அரங்கேற்றப் பயிற்சிக்காக எமது வீட்டிலே கடின பயிற்சியை தொடர்ச்சியாக சளைக்காது மேற்கொண்ட அர்ப்பணிப்புடனான ஆடல் ஆர்வம், அவரது பெற்றோர் காட்டியகலைப்பற்று என்பன இன்றும் என் மனக்கண்ணில் நினைவிற்கு வருகின்றது.

பரதக்கலைஆர்வத்தின் தொடர்வெளிப்பாடாக ஜனீத்ரா தனது மகளான வைஷ்ணவிக்கு தானே குருவாகவும் தாயாகவும் இருந்து அரங்கேற்றம் செய்ய விளைவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. தனதுபன்னிரண்டாவதுவயதில் அரங்கப் பிரவேசம் செய்யவிளையும் செல்வி வைஷ்ணவிக்கும், தாயும் குருவுமாக இருந்து வைஷ்ணவியை அரங்கேற்றுவிக்கும் திருமதி.ஜனீத்ரா ஜெகரூபனுக்கும் எனது இதயம் நிறைந்தவாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கிஅரங்கேற்றம் சிறக்கஆடல்வல்லான் ஆசிவேண்டிஅமைகின்றேன்.

**பரதக்கலைமேல்பற்றுக்கொளல்முன்செய்நல்வினைப்பயனேயாம்**
**பரதக்கலையைப் பக்தியுடன் பயிலமனமும் மெய்யும் பண்படுமாம்**
**பரதக்கலையில் பாண்டித்தியம் பெற்றிடபக்குவநிலையும்மேம்படுமாம்**
**பரதக்கலைக்காய் பணிகள் புரிந்திடபக்திபரவசம் பரவிடுமாம்**

**பரதக்கலையைப் பார்த்து இரசித்திடல் பக்திமேலிடவழிகோலும்**
**பரதக்கலையுள் திளைத்திருக்கதியானயோகமும்கைகூடும்**
**பரதக்கலையால் பரமனைப் பரவிப் பரிபக்குவநிலையைப் பெற்றிடலாம்**
**பரதக்கலையால் பரதார்ப்பணம் செய்தேபரமானந்தத்தில் திளைத்திடலாம்.**

**கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா**
ஸ்தாபக இயக்குனர்
நாட்டியகலாகேந்திரா - கலைமன்றம்

# வாழ்த்துச் செய்தி



ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் பரதக் கலையும் ஒன்றாகக் கருதப்படுகிறது. விஞ்ஞான தொலில் நுட்பத்துடன் அறிவியல் சிகரத்தைத் தொடுகின்ற இன்றைய காலகட்டத்திலும் பரதக்கலையின் சிறப்பையும் நுணுக்கங்களையும் துறைபோகக்கற்று தேர்ச்சியடைந்துள்ளார் செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் அவர்கள். அவருடைய பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் யாழ் பல்கலைகழக சித்தமருத்துவ துறையின் தலைவர் என்ற வகையிலும் நான் மட்டற்ற மகிழ்சியடைகின்றேன்.

மேற்படி அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் எனக்கு உரிமையும் கடமையும் ஒருவித தொடர்பும் இருப்பதாக நான் உணர்கின்றேன். எவ்வாறு சித்த மருத்துவம் சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டு சித்தத்தை சிவன்பால் வைத்த சித்தர்களால் பரப்பி வளர்த்தெடுக்கப்பட்டதோ அவ்வாறே ஆடல் வல்லோனாகிய சிவனே பரதக்கலைக்கு அதிபதியாக இருந்து பரத முனிவரால் இவ்வுலகிற்கு பரப்பபட்டதாகும்.

அரங்கேற்றம் காணும் நாயகி செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் அவர்களுடைய அன்புத்தாயார் குருவாக இருந்து நெறிபடுத்தியுள்ளமை இங்கு காணப்படுகின்ற சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

எனவே செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் அவர்கள் பரத நாட்டியத்தை மேலும் கற்றுத்தேறி பார்புகழ பரதக்கலையை பரப்பி சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்கின்றேன். அத்துடன் பரதக்கலையினூடாக என்றும் பசுமையான எதிர்காலத்தை பெற செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் அவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

**டாக்டர் திருமதி வி. சத்தியசீலன்**
தலைவர்,
சித்தமருத்துவ அலகு,
யாழ்பல்கலைக்கழகம்.

# அரங்கம் காணும் செல்வி வைஷ்ணவிக்கு
# அன்பு கலந்த வாழ்த்துக்கள்



ஆடற்கூத்தன் நடராஜப்பெருமானது அற்புதக் குழந்தையாக உருவகிக்கப்படுவது ஆடற்கலையாகும். நடராஜப் பெருமானில் இருந்து தோன்றிய ஆடற்கலையானது பரதரின் இலக்கணம் கண்டு தூய பரதமாக செவ்வியல் தரநிலையை அடைந்தது. இதன்பால் வரன்முறை கொண்ட பரதக்கலை தமிழர்களின் அருங்கலைச் சொத்தாகப் பேணப்பட்டும், அதன் செழுமை குன்றா வண்ணம் அடுத்துவரும் சந்ததியினருக்குக் கையளிக்கப்பட்டும் வருகின்றது. இதனால் தான் இன்றைய தகவல் யுகத்திலும் கூட பரதக்கலையானது தன்னிலை மாறாது எழுச்சியுற்றுள்ளது.

இத்தகைய பெருமைசேர் பரதக்கலையை முறைப்படி கற்றுணர்ந்து அரங்கேறும் தருணம் கண்ட என் அன்பு மருமகள் செல்வி வைஷ்ணவி ஜெகரூபனைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன். கலைஞானம் என்பது எளிதில் கிட்டிவிடும் வரம் அன்று. அது ஒரு தவம், பிறப்புடன் பிணைந்து பெருக்கெடுக்கும் பேராறு. இத்தகைய கலைப் பேராற்றில் உவகை கண்ட குடும்பப் பின்னணியில் பிறந்தவர் வைஷ்ணவி. அன்னை வழி கையளிக்கப்பட்ட பரதக்கலையைத் தனதாகக் கொண்டு தன் குடும்பத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். அன்னையையே தன் வல்ல குருவாகவும் பெற்ற பேறுடைய வைஷ்ணவி மென்மேலும் இக்கலையில் சிறந்து விளங்கி மேனிலை வெல்ல ஆடற்கரசன் நடராஜப்பெருமானது ஆசிகள் கிட்ட வேண்டும் என உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

கலைப் பாரம்பரியத்தில் பிறந்து, கலையுடன் கலந்த செல்வி வைஷ்ணவி அரங்கதேவதையின் துணைகொண்டு சிறப்புற அரங்கேற வேண்டும் என ஆடல்வல்லான் நடராஜப்பெருமானது ஆசிவேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**"வாழ்க பரதம்**
**வளர்க கலைப் பாரம்பரியம்"**

**பரத கலாவித்தகர் திருமதி**.T.C. **டர்ஷினி** BFA [Hons.],
MA[Merit], PGDE, PGDEM [R] ,
Lecturer at Sri Pada National College Of Education.

# வாழியவே வாழியவே...

திருவாளர் சோமசேகரசிங்கம், வரதலட்சுமி குடும்பத்தினர் எனது குடும்பத்தின் உற்ற உறவுகள் ஆவார்கள்.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கோண்டாவிலில் இயங்கிவரும் "நிரு" கல்வி நிறுவனத்தில் கல்வி கற்பித்துவிட்டு வருகையில் மாலை நேரம் ஒரு பிஞ்சுக்கை என்கை பிடித்து தனது பிறந்தநாளுக்கு வீட்டிற்கு வருமாறு இழுத்துச் சென்றது. அன்று "சிங்கம் இல்லத்தில்" வைத்த கால் இன்றும் அங்கேயே இருக்கிறது. அன்று அந்தப் பிஞ்சுக் கைக்கு சொந்தமானவள் தான் இன்று வளர்ந்து குமரியாகி, ஒருவருக்கு மனைவியாகி, மூன்று குழந்தைகளுக்கு தாயுமாகி, அக்குழந்தைகளில் மூத்தவளாகிய "வைஷ்ணவிக்கு" பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்த்துகிறாள் என்ற செய்தி அறிந்ததும் "பிஞ்சுக்கை ஜெனித்திராவின்" அன்றைய தோற்றமும் நினைவுமே முதலில் படமாக ஓடியது.

இன்றைய திருமதி ஜெ. ஜெனித்திரா அன்று செல்வியாக இருந்தபோது இளங்கலைஞர் மன்றத்தில் அவரது நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. பெருங்கலைஞர்கள் நேரில் வந்து வாழ்த்தியது இன்றும் பசுமையாகவுள்ளது. அந்த வரிசையில் செல்வி வைஷ்ணவி ஜெகனுக்கும் நாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்நாடி எனது குடும்பத்தினர் சார்பாக பிரார்த்தனை செய்கின்றேன்.

உலகின் மிகச் சிறந்த கலை நமது பரதநாட்டியம். கரைநாட்டவர் இசை எனப்படும் கர்நாடக இசையுடன் இணைந்த இன்பக்கலை என்றால் மிகையாகாது. சைவ சமயத்தவரின் முதல் கடவுளாகிய "சிவன்" அம்பிகையுடன் ஆந்த தாண்டவம் ஆடினார் என்று படிக்கிறோம். அவர்களின் தாண்டவத்தை ஓவியமாக, சிற்பமாக பல இடங்களில் காணமுடிக்கிறது.


பரதக்கலையின் சிறப்புப்பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. இலங்கையில் பரதக்கலை அரங்கேற்றத்துடன் முடிவடைவதை காண்கிறோம். அடுத்த நிலைக்கு செல்லாமை வருத்தமளிக்கிறது. பரதம் பிறந்த பாரத நாட்டில் இந்த அருங்கலை உயிராகப் போற்றப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இன்று "தமிழ் கலைகள்" தனது வடிவத்தை இழந்துவரும் நிலைகளைக் காண்கிறோம். மாற்றம் ஏற்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் "நவீனம்" என்ற பெயரில்

அடிப்படையை, ஆழ்ந்த வேரை அழித்துவிட முடியாது; அழிக்கக்கூடாது என்பது அடியேனின் தாழ்மையான கருத்தாகும்.

கண்ணுக்கு அழகும், செவிக்கு இன்பமும் தரும் பரதக் கலையினைப் பயின்று இன்று அரங்கேற்றம் காணும் எனது பேத்தி வைஷ்ணவிக்கு இறைவன் எல்லாச் செல்வங்களையும் வழங்கவேண்டும். வைஷ்ணவியின் தந்தை டாக்டர் ஜெகரூபன் நல்ல கவிஞர், தாய் ஜெனித்திரா நாட்டிய மயில். அத்தகைய கலைக்குடும்பத்தின் முதல் வாரிசாகத் திகழும் வைஷ்ணவியின் கலை வாழ்வு மிளிரட்டும்.

**"சொல்லின் செல்வர்"**
**இரா. செல்வவடிவேல்**
*142/1, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# ஆசிச் செய்தி



பரதம் ஓர் தெய்வீகக்கலை! இது நடராஜப்பெருமானால் எமக்களிக்கப்பட்ட கொடை! இந்த அருங்கலையை பன்னிரெண்டு வயதுச் சிறுமி தாயார் ஜனீத்திரா ஜெகரூபனிடம் முறையே பயின்று அரங்கேற்றம் செய்வதை எண்ணி மகிழ்வடைகின்றேன்.

இன்று பிரபல நாட்டிய தாரகையாக தமிழீழத்தில் வாழ்கின்ற ஜனீத்திராவின் பெற்றோர் திரு.திருமதி. சோமசூரியசிங்கம் வரதலெட்சுமி குடும்பத்தினர் (சிங்கம் பார்மஸி) என்னுடனும், இளங்கலைஞர் மன்றத்துடனும் நெருங்கிய ஈடுபாடு கொண்டவர்கள். அத்துடன் எல்லாக் கலை நிகழ்வுகளுக்கும் ஆதரவளிப்பவர்கள்.

இவர்களது மகள் ஜனீத்திரா பிரபல நடன ஆசிரியை கிருசாந்தி ரவீந்திராவிடம் நடனம் பயின்று 1994ம் ஆண்டு அரங்கேற்றம் செய்து பெரும் பாராட்டைப் பெற்றவர். இவர் ஒரு சிறந்த நடன ஆசிரியர். இவரின் அரங்கேற்ற நிகழ்வுக்கு நான் பாடியதுநினைவிற்கு வருகின்றது. ஜெனீத்திரா சிறந்த மேடை நிகழ்ச்சிகள் பலவற்றை ஈழத்தில் செய்துள்ளார். சிறந்த ஆசிரியக் கலைப்பணியையும் ஆற்றி வருகின்றார்.

இதற்கு மேலாக தனது மகளுக்கும் பரதத்தைப்பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்வதையிட்டு எண்ணி முதலில் ஜனீத்திராவுக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதுடன், அரங்கேற்றம் காணும் குழந்தை வைஷ்ணவிக்கும் எனது நல்லாசிகள். நீங்கள் அதிஷ்டசாலி. உங்களுக்கு குருவாக உங்கள் அம்மா அமைந்ததே பெரும் பாக்கியம். உங்கள் அம்மாவைப்போல் நீங்களும் பெரும் நாட்டிய தாரகையாக விளங்குவதுடன், புலம்பெயர் தேசங்களிலும் உங்கள் கலைப்பயணங்கள் தொடரவேண்டுமெனவும், அரங்கேற்றம் வெகு சிறப்பாக நடந்தேறவும் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

இந்த நேரத்தில் உங்கள் பெற்றோர், உற்றார் உறவினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, எல்லாம்வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**இன்னிசை வேந்தர் பொன். சுந்தலிங்கம்**
**(கனடா)**



# வாழ்த்துச் செய்தி



அருங்கலையாம் ஆடற்கலையில் நடன அரங்கேற்றம் காணும் அற்புத நர்த்தகி செல்வி. ஜெகரூபன் வைஷ்ணவியின் நடன அரங்கேற்றம் இன்று இனிதே நடைபெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க நின் கலைப்பணி வளமுடன்

**செல்வி ஞானலோஜினி சிவஞானம்**
சட்டத்தரணி

***"Where the hands(hasta) are, go the eyes (drishti);***
***where the eyes are, goes the mind (manah);***
***where the mind goes, there is an expression of inner feeling (bhaava)***
***and where there is bhaava, mood or sentiment (rasa) is evoked."***
***— Source: Natyashastra***
***Bharatanatyam – An art form that demands Expression, Dedication and Passion***

## Arangetram

The wordarangetramin Tamil language means ascending the stage by a dancer on the completion of formal training. Itis the debut, on-stage performance, of a student of Indian classical dance and music.

The Tamil text Silappathikaram, which can be dated to 2nd or 3rd centuries where it follows the adventures of the young dancer, Mathavi, and includes a whole chapter devoted to the Arangerrukai or the story of her Arangetram. From this text and other sources, we get the importance of such a performance in presenting a newly trained dancer to an audience.

This day marks the BharatanatyaArangetram of VaishnaviJagaruban.It also refers to the graduation ceremony where the G HYPERLINK "https://en.wikipedia.org/wiki/Guru"uru (Mrs. JanithraJeyaruban), proudly presents her sishya (student) to the public, critics, fellow artists, family and friends. It marks the completion of a dancer's formal training and the talent of the student and the knowledge of the Guru are judged.

It is aday for VaishnaviJagaruban's tireless devotion, in learning the art and showcasing her talent to bigger masses. She has risen to a new level of performance and developed the discipline to achieve a long term success in classical dances.

The support and the backing given to Vaishnavi by her familyto persue the classical dance of Bharatanatyam is immense.To succeed in life a mentor especially an unwavering and focused mentor is necessary.Mrs. JanithraJeyaruban also the mother of Vaishnavi, is an accomplished dancer herself, who has passed down her talent, knowledge, principles and values to her student. The silent, steady and invisible strength Dr. Jeyaruban the father is a pillar of strength to the family. Their immense will power and capacity to give their fullest to whatever task they take still continues to astonish me.

The support given to the (Guru) Janithraand the grand daughter vaishnavi by Mr. and Mrs. Singam and family is bearing fruits on this day where the goal has been reached after many trials and tribulations.

It is a big achievement to the Vaishnavi's Family and friends who stood by with outstretched hands offering help.

I wish Vaishnavi the very best and may God's blessings be always with her

**Mrs. Jayanthi Vinodhan**

Attorney at Law& Notary Public

Department of Government Printing,
No. 118,
Dr. Danister de Silva Mawatha,
Colombo 08.

2018.07.26

J. Janeethiran who worked in Government Printing Department has shown her talents as a great dancer in various ceremoney occasions. I wish good luck at the Baratha Natya Arangetram to her daughter Vaishnavi Jegaruban also to become a talented dancer who is studing in Methodist College, Colombo.

..............................

Gangani Liyanage,
Government Printer.

රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව,

නො. 118,

දොස්තර ඩැනිස්ටර් ද සිල්වා මාවත,

කොළඹ 08.

2018.07.26

රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ සේවය කළ ජේ. ජෙනිතිරා ඉතා දක්ෂ නැටුම් ශිල්පිණියක් බව අප ආයතනයේ පැවති විවිධ උත්සව අවස්ථාවන්හිදී පිළිබිඹු කර ඇත. කොළඹ මෙතෝදිස්ත විද්‍යාලයේ අධ්‍යාපනය ලබන වෛෂ්නවි ජෙගරූබන් වන ඇයගේ දියණියගේ භරත නාට්‍ය කළඑළි මංගල්‍යයට මාගේ හද පිරි සුභාශිංසනය එක් කරන අතර, ඇයද ඉතා දක්ෂ නැටුම් ශිල්පිණියක් වේවායි මම ප්‍රාර්ථනා කරමි.

.....................................

ගංගානි ලියනගේ,

රජයේ මුද්‍රණාලයාධිපති.

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දුරකථන අංකය
தொலைபேசி இல.
Telephone No. 021-2222475

ෆැක්ස් අංකය
தொலைநகல் இல.
Fax No. 021-2222475

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
**REGISTRAR - GENERAL'S DEPARTMENT**

උතුරු කලාප කාර්යාලය
வடக்கு வலய அலுவலகம்
NORTHERN ZONAL OFFICE

3 වැනි මහළ,
ඉ. රෙ. කාර්යාල ගොඩනැගිල්ල,
යාපනය.
3 ஆம் மாடி,
காணிப் பதிவக கட்டிடம்,
யாழ்ப்பாணம்.
3rd Floor,
Land Registry Building,
Jaffna.

දිනය / திகதி /Date : 10/8/2018

# வாழ்த்துரை

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு விவாகப் பதிவாளராக கடமையாற்றும் திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம் அவர்களின் பேர்த்தி செல்வி வைஷ்ணவி அவர்கள் நடன அரங்கேற்றம் காண்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சமூக சேவையினை சிறப்பாக மேற்கொண்டுவரும் சோமசூரியசிங்கம் குடும்பம் இயல்பாவே கலை ஈடுபாடும் பாரம்பரியமும் கொண்டதாகும். அவ்வழித்தோன்றலான புதிய தலைமுறையைச் சேர்ந்த அவரது பேர்த்தி வைஷ்ணவி கலை ஈடுபாடுள்ளவராக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

செல்வி. வைஷ்ணவி அவர்களின் தந்தையார் Dr. ஜெகரூபன் மருத்துவராக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சிறப்பாகப் பணிபுரிந்து வருவதும் தாயார் ஜனீத்திரா அவர்கள் இந்தியாவில் முறைப்படி பரதம் கற்று அரங்கேற்றம் கண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு கலையில் ஈடுபாடு கொள்வதனூடாக தான் சந்தோசமாகவும் நிறைவாகவும் வாழ முடிவதோடு அவன் சார்ந்த சமூகத்தையும் அதனூடாக நல்வழிப்படுத்தி ஆற்றுப்படுத்த முடிகின்றது. மறுபுறத்திலே இன்றைய காலத்தில் பலரும் பேசிக்கொண்டிருக்கின்ற சமூகப்பிறழ்வுகளை இக்கலை வடிவங்களினூடாக ஓரளவேனும் களைந்து கொள்ளமுடியும்.

அந்தவகையிலே, பாரம்பரியமாக நடனத்திலும் இசையிலும் ஈடுபாடுள்ள குடும்பத்தில் பிறந்த செல்வி. வைஷ்ணவி அவர்களும் பரதநாட்டிய அரங்கேற்றம் காண்பது எதிர்காலத்திலும் கலைப்பாரம்பரியம் தொடரும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

இறைவன் திருவருளால் இவரது கலைப்பயணம் சிறக்கவும், அவர்கள் கல்வியில் சிறந்து புகழ்பெறவும் வாழ்த்துகின்றேன்.

**ப. பிரபாகர்,**
உதவிப்பதிவாளர் நாயகம் (வடக்கு வலயம்)
பதிவாளர் நாயக திணைக்களம்.



நாடகச் சக்கரவர்த்தி, இசை நாடக நவரச கலைமணி, கலாபூஷணம்

**திருவாளர் ப. பரராஜசிங்கம்**

அகில இலங்கை சமாதான நீதிவான்

சிரேஷ்ட ஆலோசகர்- அகில இலங்கை இளங்கோ கழகம்

கலைக்கோயில், சின்னத்தாய், புலோலி தெற்கு, புலோலி

# ஏற்றமுடன் வாழ்த்துகிறேன்



*ஆயநறு கலை தம்முள் மேன்மையான*
*ஆடலதை மூலமெனக் கொண்டு நன்றே*
*தூறநெறி முறையோடு பரதம் தன்னில்*
*துலங்கிடவே அரங்கேற்றம் காணும் இந்நாள்*
*தாயவள் ஜனீத்ராவின் தடத்தில் நீரும்*
*தலைமகளாய் கலைவளர்க்கும் அரிய பொன்னாள்*
*சேயெனவே பேர்த்தியுனை வாழ்த்து கின்றேன்*
*சீரோடும் சிறப்போடும் கலையால் வாழி!*

*தந்தை ஜெகரூபனுடைய புலமை ஓங்க*
*தவமெனவே தாத்தாவும் ஆசி சேர்க்க*
*சிந்தை முற்றும் சீரதனை நினைவாய் கொண்டு*
*சிறப்போடு பாட்டியுமே அன்பு பாச்ச*
*முந்தை அருள்பயனெனவே குருவும் வாய்த்து*
*முறையாக அத்தனையும் ஒருங்கே சேர*
*எந்தை இறையாசியதை இதயமாய் வேண்டி*
*ஏற்றமுடன் வாழ்த்துகிறேன் வாழி! வாழி!*

*கலையுலகில் நாட்டியத்தால் பெயரை நாட்டி*
*கண்ணியமாய் பரம்பரையின் பெருமை கூட்டி*
*நிலையென்றும் கலையாலே கிட்டும் என்று*
*நீள்புவியில் தடம்பதித்து வாழி! வாழி!!*
*அலையலையாய் ஆர்வலர்கள் சூழ்ந்து வாழ்த்த*
*ஆனந்த அரங்கேற்றம் கண்டு வாழி!*
*மலையரசன் பெருங்கூத்தன் பாதம் போற்றி*
*மனமார வாழ்த்துகிறேன் வாழி! வாழி!!*

**கலாபூஷணம் ப. பரராஜசிங்கம்,**

*சிவத்தமிழ் வித்தகர்*
கலாபூஷணம்
**சிவ.மகாலிங்கம்**
"சிவஜோதி"
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே.இல : 021 221 2226

**Siva - Mahalingam**
**B.A, M.A, Dip.in.Ed, S.L.E.A.S,**
**Retd : Assitant Director**
*"Sivajothy"*
*Potpathy Road,*
*Kondavil East, Kovdavil.*

# சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் வழங்கும் வாழ்த்துச் செய்தி

மனிதன் தோற்றுவித்த நுண்கலைகளில் காலத்தால் மிக முற்பட்டது நாட்டியக் கலையே ஆகும். இசை நடனக் கலைகள் செழித்து வளர்வதற்கு நமது திருக்கோயில்களே ஆதாரமாகத் திகழ்ந்தன. மலர், நீர், தூபதீபம் ஆகிய எல்லாவிதமான உபசாரங்களிலும் பார்க்க நிருத்தியோ உபசாரமாகிய பரதநாட்டியத்தையே இறைவன் பெரிதும் விரும்புகிறான் என நிருத்திய ரத்னாவளி என்ற நூல் கூறுகிறது. வேதமோதி வேள்விகள் தானங்கள் செய்து அடையும் பயனை நாட்டியக் கலையும் மனிதனுக்கு கொடுக்கவல்லது எனப் பரதமுனிவரும் தமது நாட்டிய சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பாரத நாடு உலகிற்குத் தந்த சிறப்புமிக்க நுண்கலை பரதநாட்டியமாகும். ஆன்மா இறைவனோடு இணைவதற்கு வழிகாட்டும் யோகக் கலையாகவே பரதநாட்டியத்தை இந்து சமயத் திரு நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. பாவம், ராகம், தாளம் என்ற மூன்றுமே பரத நாட்டியத்திற்கு அடிப்படையாகும்.

ஜெகரூபன் ஜனீத்திரா தம்பதிகளின் தவப்புதல்வியாகிய வைஷ்ணவி நாட்டியக் கலையை தமது தாயாரிடமே பயின்றுள்ளார். தாயார் திருமதி. கிருஷாந்தி ரவீந்திராவிடமும், பின்பு தமிழ்நாட்டிற்குச் சென்று திரு.ஏ். தனஞ்சயனிடம் நாட்டியக்கலையை ஒழுங்காகக் கற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்.

செல்வி. வைஷ்ணவி ஜெகரூபனின் பரதநாட்டிய அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன். நாட்டியப் பேரொளியாக மலரப்போகும் வைஷ்ணவி சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பூரணமாகக் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**
ஓய்வுநிலை விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை,
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர், இந்து சமய
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# வாழ்த்துச் செய்தி



திரு.திருமதி. ஜெகரூபன் தம்பதிகளின் செல்வப் புதல்வியும் திரு. திருமதி. சோமசூரியசிங்கம் தம்பதிகளின் பேர்த்தியுமாகிய செல்வி. வைஷ்ணவி ஜெகரூபனின் அரங்கப் பிரவேசத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவகை அடைகிறேன்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் நுண்கலைகள் அதி சிறப்பும் உன்னதமும் வாய்ந்தவை. அதில் பரதக்கலை செவிக்கும், மனதுக்கும், கண்ணுக்கும் பேரின்பமளித்து ஆத்ம திருப்தி அளிக்கிறது. ஆழ்ந்த கடலில் ஆழச்சென்று முத்துக்குளிப்பவன் ஒரு சிறு முத்தை எடுப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டு முயற்சி செய்கிறானோ அது போல் தான் பரதக்கலையும். அதில் ஆழ நனைந்தால் தான் ஒரு சிறு துளியேனும் கலைஞானத்தைப் பெறமுடியும். அந்தவகையில் பெற்ற தாயிடம் பரதக்கலையைப் பயின்று இன்று அரங்கப்பிரவேசம் காணுகிறார் செல்வி வைஷ்ணவி அவர்கள். இவரின் பேரன், பேர்த்திமார் சிறந்த கலை ஆர்வம் உள்ளவர்கள். எனவே தாம் கண்குளிர பார்க்கவேண்டும் என்ற பேராசையினால் இன்று இந்த அரங்கப் பிரவேசத்தை முன்னெடுக்கிறார்கள். தாயார் கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா அவர்களிடமும் அரங்கப் பிரவேசம் கண்டவர். அதுபோல் தாய்வழியில் இவரும் அரங்கப் பிரவேசம் கண்டு பெற்றோருக்கும், பேரன் பேர்த்திமாருக்கும், தாய் மண்ணிற்கும் பெருமை சேர்த்திட எல்லாம்வல்ல தில்லை நடராஜப் பெருமான் அருளாசி கிடைக்கவேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.

"வாழ்க கலை; வளர்க நம் கலைப்பாரம்பரியம்"

இவ்வண்ணம்
**கலாகீர்த்தி ஶ்ரீமதி சாந்தினி சிவநேசன்,**
ஓய்வுநிலை விரிவுரையாளர்.

# வாழ்த்துச் செய்தி



கலைகளினால் எங்கள் வாழ்வு அர்த்தம் பெறுகின்றது. சூழலின் நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் தாண்டி எமக்கு ஆத்மபலத்தைத் தருகின்றன. இந்த வகையில் உங்கள் பண்பாடு கண்டஉயர் கலைவடிவமான பரதக்கலையின் அழகும் அது தரும் ஆற்றலும் தனித்துவமானவை.

இந்த வகையில் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அரங்கேறுவதை இட்டு பெரிதும் மகிழ்வடைகிறேன். வைஷ்ணவியின் தாயார் நடனக்கலையை சிறப்புறக்கற்று அரங்கேற்றம் கண்டவர். ஜனீத்திரா என்னிடம் சில நடன உருப்படிகளைக் கற்றுக்கொண்டவர். நடனக்கலை மட்டுமல்ல, பாடும் திறமையும் பெற்றவர். இவர் மகள் செல்வி வைஷ்ணவி தரம் 8ம் வகுப்பை கொழும்பு மெதடிஸ் கல்லூரியில் கல்வி கற்று வருகிறார். அன்னை மடியில் ஆரம்பித்த வைஷ்ணவியின் கலைப்பயணம் இன்று ஆண்டவன் திருவடியில் அர்ப்பணிக்கப்படும் அற்புத மலராக மலர்ந்து, அவர் கலை உலகில் மேலும் பல சாதனைகள் படைக்க தில்லைக்கூத்தனின் திருவடிகளை வணங்கி என் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வளர்க நம் தமிழர் கலைகள்"

**கலாவித்தகர் நடனத்திலகம்**
**ஸ்ரீமதி வசந்தி குஞ்சிதபாதம்**
ஓய்வுநிலை ஆசிரியை,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

# வாழ்த்துச் செய்தி

இன்றைய நவீன நாகரீக உலகத்தில் தமிழ் கலைக்கும் பன்னாட்டிற்கும் முக்கியமளித்து பரம்பரையாக தெய்வீகக்கலையான பரதத்தைக் கற்று இன்று அரங்கேற்றம் செய்யும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் நிறைந்த ஆயுளும், வாழ்வில் சுபீட்சமும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

தம் தாயாரான ஜெனீத்திரா ஜெகரூபன் அவர்கள் ஒரு நாட்டியக்கலைஞர். இவரது தாயாரும் கலையையும் பண்பாட்டையும் மதிக்கும் பெரும் கலா ரசிகர். கலைக்குடும்பத்தில் பிறந்து தன் தாயை குருவாகக் கொண்டு கலையை செவ்வனே கற்று இன்று அரங்கப் பிரவேசம் செய்யும் வைஷ்ணவி பரதக்கலையில் மென்மேலும் பிரகாசிக்கவும் தில்லைநடராஜனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**நாட்டியக்கலைமணி**
**திருமதி. சுமதி புவனேந்திரன் (ஆசிரியர்)**
வ.இ.ச. சபை, இணைப்பாளர்,
கொழும்பு.

# வாழ்த்துச் செய்தி



இன்று அரங்கப் பிரவேசம் செய்யும் குழந்தை வைஷ்ணவி ஜெகரூபனை வாழ்த்துவதில் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். இவரின் தாயார் ஜனீத்திரா சிறு வயதிலேயே நாட்டியப் பேராசான் வீரமணி ஐயா அவர்களின் ஆசியைப் பெற்றவர். கிராமத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்று கிராமத்திற்கு பெருமை தேடித்தந்தவர். அதேபோல அவரின் மகள் வைஷ்ணவியும் எமது கிராமத்திற்கு பெருமை தேடித் தருவார் என்பது எனது நம்பிக்கை. வைஷ்ணவி கல்வியிலும் பரதத்திலும் சிறப்புற்று பிரகாசமாக வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

நன்றி!

ஸ்ரீமதி வசந்தி சந்திரன்<br>
முன்னாள் நடன ஆசிரியை,<br>
இணுவில் இந்துக் கல்லூரி.<br>
(அமெரிக்கா)

# இசை ஆசிரியரின் வாழ்த்துச் செய்தி



கலைகள் மனிதனின் வாழ்வியல் அம்சங்களுடன் பின்னிப் பிணைந்திருப்பவை, இதனால் தான் உலகெங்கும் நாகரிகமடைந்த மக்கள் யாவரும் அழகுக் கலைகளை வளர்த்திருக்கிறார்கள். தில்லைக்கூத்தனின் திருநடனத்தில் அகிலமே அசைகிறது. இத்தகைய பார்போற்றும் பரதக்கலையை செவ்வனே கற்று இன்று அரங்கேற்றம் காண விழையும் செல்வி ஜெகரூபன் வைஷ்ணவியை மனதாரப் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

இவரின் தாயார் ஜெனீத்திரா ஜெகரூபன் இலங்கையிலும் இந்தியாவிலும் பரதக்கலையை பயின்றவர் பண்பான உள்ளமும் பரந்த மனப்பாங்கும், தணியாத கலைத்தாகமும் கொண்டவர். இவரின் தாய் தந்தையர் நீண்டகாலமாக எமது குடும்ப நண்பர்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கில் ஆடற்கலையும் ஒன்றாகும். அவ்விதமான நடனக்கலையை பயின்று 1994ல் அரங்கேற்றிய நாட்டியக் கலைமணி ஜனித்ராவின் வாரிசு, வைத்திய கலாநிதி ஜெகரூபனின் புத்திரி, செல்வி வைஷ்ணவி தனது பன்னிரெண்டாவது வயதில், இன்றைய தினம் யாழ். நகரில் அரங்கேற்றம் செய்கின்றார் என்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

செல்வி வைஷ்ணவி, நடனக்கலையில் மட்டுமமன்றி, சகல கலைகளிலும் உன்னதநிலையை அடைந்து உலகு போற்ற வாழவேண்டு மென எல்லாம்வல்ல நவாலி அந்திரான் அழகனதும், மெல்பேன் வக்ரதுண்ட விநாயகரதும், பாதாரவிந்தங்களைப் பணிந்து, அரங்கேற்றம் சிறப்புற நிகழவும், வைஷ்ணவி பல்லாண்டு வாழவும் எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**திருமதி ஹேமவதி கபிலதாஸ்**

# ஆசியுரை

வாழ்க்கையில் இன்பத்தையும், அமைதியையும் அள்ளித்தருபவை கலைகளாகும். அவற்றுள் நுண்கலைகள் போற்றப்படவேண்டியவை.

தமிழர் தம் பண்பாட்டில் தெய்வீக அம்சம் நிறைந்ததாகவும், இறைவனாலேயே அருளப்பட்ட பெருமையுடையதாகவும் பரதக்கலை விளங்குகின்றது.

இப்புனிதமான பரதக்கலையை செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் தன் அன்னையைக் குருவாகக் கொண்டு, தனது நான்காவது வயதிலிருந்து முறைப்படி பயின்று இன்று அரங்கேறுவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். இக்குழந்தைக்கு சிறு வயதில் பரதக்கலையைக் கற்பித்து, ஊக்குவித்து இன்று அரங்கேற்றம் நடாத்தும் பெற்றோர் வைத்திய கலாநிதி ஜெகரூபன், திருமதி ஜனீத்திரா ஜெகரூபன் இருவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

தமது மகளான திருமதி ஜனீத்திரா ஜெகரூபன் அவர்களின் நடன அரங்கேற்றத்தை வெகு சிறப்பாக நடாத்தி, அத்துடன் தமது பேத்தியான செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களையும் இக்கலையில் ஈடுபடவைத்து, ஊக்கமளித்த திரு.திருமதி. சோமசூரியசிங்கம் இருவரும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

எதிர்காலத்தில் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் கல்வியில் சிறந்து விளங்குவதுடன், சிறந்த நர்த்தியாக விளங்கவேண்டுமென்று இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா**
முன்னாள் இசைத்துறைத் தலைவர்,
இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# Message from
# Smt. Nanthini Vijayaratnam

It is with great pleasure I write this message for the Bharatanatya Arangetram of Vaishnavi Jegaruban.

An arangetram is an important stage of recognition and acknowledgement of a persons talents. Which can be only made possible through the hard work and sacrifices of the Guru and Shisya.

Vaishnavi is currently studying grade – 8 at Methodist College, Colombo. She learnt Bharatanatyam from her mother Smt. Jeneethira Jegaruban who is a talented Bharatanatyam artist.

Guru Janeethira inaugurated the 'Kala Samudra" Institution of school of dancing, Colombo and has produced many good dancers.

It is my pride to say that Guru Janeethira was my veena student for more than three years.

I would like to convey my best wishes and congratulate the Guru and Vaishnavi on their memorable occasion for a successful Arangetram.

**Sangeetha Vidwan Smt. Nanthini Vijayaratnam,**
Former Lecturer,
Ramanathan Academy of Fine Arts,
University of Jaffna.

# வாழ்த்துச் செய்தி

செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் நடன அரங்கேற்றம் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவரது தாயார் திருமதி ஜனீத்திரா ஜெகரூபன் அவர்களது நடன அரங்கேற்றம் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இளம் கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற முதலாவது நடன அரங்கேற்றமாகும். கடந்த 30 ஆண்டுகளாக இருந்த இக்கட்டான சூழலில் தான் சிறப்பாக கற்ற கலையை இன்று ஜனீத்திரா தன் மகள் வைஷ்ணவிக்கு கற்பித்தமை மிகவும் பாராட்டவேண்டிய விடயம்.

எம் சிறார்களின் கலை அரங்கேற்றங்கள் இன்று பெருமளவில் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் நடைபெறுவது வழக்கம். திரு. திருமதி ஜெகரூபன் தம் மகளின் நடனத்தை தாய் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றுவது பெருமை தருகிறது. இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

திரு.திருமதி சோமசூரியசிங்கம், தங்கள் மகள் ஜனீத்திராவை இசை, நாட்டிய துறைகளில் ஊக்குவித்தது மட்டுமன்றி, இன்று ஜனீத்திராவின் மூலம் தம் பேத்தி வைஷ்ணவியின் அரங்கேற்றத்தையும் சிறப்பாக மேடை ஏற்றுகிறார்கள். இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

சிறுமி வைஷ்ணவி ஜெகரூபனின் நாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக அமைய எமது வாழ்த்துக்கள்.

வைஷ்ணவியின் தாயாரும் குருவுமாகிய திருமதி ஜனீத்திரா ஜெகரூபன் தம் பணியை மேலும் தொடர்ந்து மேலம் பல மாணவர்களை உருவாக்க எமது வாழ்த்துக்கள்.

செல்வி வைஷ்ணவி நடனத்துறையிலும் மேலும் கல்வியிலும் சிறந்த நிலையை அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அன்புடன்**
**திருமதி வரதலக்ஷ்மி பாலசந்திரன்**
**இசைக்கலைமணி – வீணை**

# வாழ்த்துச் செய்தி



கண்ணின் வழியாகக் கருத்தில் புகுந்து மனதை நிறைவிப்பன கவின் கலைகள். கவின் கலைகளுள்ளே நடராஜப் பெருமானின் அற்புத சிருஷ்டியாகிய நடனக்கலையின் அற்புதமான அனுபவ நிலையை பரதமுனிவரின் நாட்டியசாஸ்திரம் மிக அழகாகக் கூறுகிறது.

யதோ ஹஸ்த ததோ திருஷ்டி
யதோ திருஷ்டி ததோ மனஹ
யதோ மனஹ ததோ பாவஹ
யதோ பாவஹ ததோ ரஸஹ”

அதாவது கைகள் எங்கு செல்கின்றனவோ அங்கு தான் கண்கள் செல்ல வேண்டும் கண்கள் எங்கு செல்கின்றனவோ அங்குதான் மனமும் செல்ல வேண்டும். மனம் எங்கு செல்கின்றதோ அங்கு தான் பாவம் இருக்க வேண்டும். பாவம் எங்கு இருக்கின்றதோ அங்கு தான் நவரஸங்களும் இருக்கும். இவ்வாறு உடலையும் உள்ளத்தையும் ஒன்றிணைத்து அழகியலையும் ஆன்மீகத்தையும் உணரச் செய்யும் அற்புதத் திறன் கொண்டது பரத நாட்டியம்.

இத்தகைய ஆடற்கலையை அழகுறப் பயின்று இன்று அரங்கேற்றம் காணும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் கொழும்பு மெதடிஸ் கல்லூரியில் தரம் எட்டில் கல்வி பயிலுகிறார். கலையார்வம் மிக்க குடும்பப் பின்னணியும், தனது தாயாரிடமே முறையாகப் பயின்று இன்று அரங்கேறுவதும் செல்வி வைஷ்ணவிக்கு கிடைத்த வரப்பிரசாதங்களாகும்.

இன்று அரங்கேற்றம் நிகழ்த்தும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களின் அரங்கேற்ற விழா இனிதே நடைபெற எல்லாம் வல்ல நடராஜப் பெருமான் திருவருள் புரிவாராக. செல்வி வைஷ்ணவி ஜெகரூபன தொடர்ந்து பல்கலைகளையும் கற்று பல்வாண்டு வாழ்க என மனமார வாழ்த்துகிறேன். இவரின் இவ்வரங்கேற்றத்திற்கு அணிசேர்த்த பக்க வாத்தியக் கலைஞர்கள், பெற்றோர் அனைவரையும் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

**திருமதி தயானந்தி சிறீதரன்**
**பரத கலா வித்தகர்**
B. A (Hons),(Sanskrit), (Jaffna), M.Sc (LIS) (Madras), ASLLA, FSLLA
சிரேஷ்ட நூலகர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

# Appreciation

I Have the distinct pleasure to testify to the iinborn qualities o Selvi Vaishnavi Jegaruban whose both parents are highly accomplished and their daughter sweet and splendid with her artistic distincltions is facing her maiden recital on September 2, 2018.

Her performance should prove best and beautiful, relishable and revealing worthy of this great art – Bharatham.

Whise wish her roaring success, May God bless her with the brilliance she richly deserves. Our heartiest Congratulations!
God bless!

**T.N. Punjaksharam**
Retired Teacher.

# வாழ்த்துச் செய்தி



முத்தமிழ் என்று போற்றப்படுகின்ற எமது இயல், இசை நாடகம் பேணிக்காப்பதும், வளர்ப்பதும் ஒவ்வொரு தமிழனின் உன்னத கடமை. அந்தக் கடமையை தனது தாயுடன் சேர்ந்து அயராது பயிற்சி செய்து இன்று அரங்கேற இருக்கும் செல்வி. வைஷ்ணவியை பாராட்டுவதில் நானும் எனது பிள்ளைகளின் குடும்பமும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எனக்கு இவர்களுடைய குடும்பத்துடன் மூன்று தலைமுறைகளாக மிகுந்த ஈடுபாடு இருந்து வருகிறது. இந்தக் குழந்தையின் தந்தை டாக்டர் ஜெகரூபன் அவர்களுடைய கல்வி வளர்ச்சியைக் கண்டு நான் மிகுந்த பெருமிதமடைந்த நாட்களும் உண்டு. இன்று தந்தைக்கு நிகராகக் கல்வியிலும் தாயக்கு நிகராகக் கலையிலும் வைஷ்ணவி ஆர்வம் காட்டுவது எம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

வைஷ்ணவியின் இம்முயற்சிக்கு ஏற்றங்கொடுத்து, கலைக்கும் மொழிக்கும் மெருகூட்டிய அவருடைய தாய் தந்தையரையும் இந்நேரத்தில் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இளைய தலைமுறைக்கு வைஷ்ணவி ஒரு எடுத்துக்காட்டு. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற பொன்மொழிக்கேற்ப மேலும் மேலம் பல படிகளைக் கடந்து உச்ச நிலையை அடைந்து பார் போற்றும் நல்ல மங்கையா வாழ எல்லோருக்கும் பொதுவான அந்த இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**சி. செ. இலங்கையர்**
இளைப்பாறிய வங்கி முகாமையாளர்.

# வாழ்த்து மடல்



நவரசம் வதனமதில் திகழ ஆடல்
பழரசம் ஊட்டிடும் எம் அணங்கே!
வண்ணக் கதைகளை கத்திவிழிபேச
எண்ணக் கோலமதை தத்திம் விரலது போட
சின்னப் பதுமை உன் தோம் தோம் பங்கயம் ஆட

கன்னல் சுவை தமிழ் நிமிர்வுடன் வாழ
முத்தமிழ் மூன்றதின் மூத்தவளோ
நடமாடும் இளந்தோகை வரப்பிரசாதமோ

நங்கை உன் சதங்கை ஒலி கேட்டு
நந்தவனம் ஆகட்டும் வெந்தவனம்
மங்கை வைஷ்ணவி உன் முத்திரை பார்த்து
பொங்கு புகழ் இத்தரை பெற்றிடுமே.

வாழி! வாழி! வாழி!

வாழ்த்துபவர்
ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார்
முன்னாள் தலைவர்
**இ. நடராசா**

# தமிழர் கலாச்சார மன்றம் - சூரிச்

இன்று அரங்கேற்றம் காணும் செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்களுக்கு நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

எமது கலைகளில் மிகவும் தொன்மையானதும் உன்னதமானதும் ஆடற்கலை. இக்கலையினை பயில்வது சாதாரணமானதல்ல என்பதை நாம் அறிவோம். அதிலும் கல்விச்சுமைகளுக்கு மத்தியில் இக்கலையினை பயின்று இன்று அரங்கேற்றம் வரை வளர்ச்சி கண்டிருப்பது பெருமைக்குரியதாகும்.

செல்வி வைஷ்ணவியின் குருவாக விளங்கிடும் அவரது தாயார் திருமதி ஜனீத்திரா ஜெயரூபன் அவர்களின் திறமையும், கற்பித்தலில் கண்டிப்பும் அன்பான அரவணைப்பும் போற்றுதற்குரியது. அவரது கலைப்பணி தொடர ஆடற்கலை அரசன் நடராஜப் பெருமான் என்றென்றும் அருள்பாலிப்பான்.

செல்வி வைஷ்ணவியின் அரங்கேற்றம் சிறக்கவும் அவரின் ஆடற்கலையின் சிறப்பு உலகெல்லாம் பரவவும் சூரிச் தமிழர் கலாச்சார மன்றம் சார்பாக வாழ்த்துக்களை கூறுகிறோம்.

**ம. முருகதாஸ்**
**(சூரிச் தமிழர் கலாச்சார மன்ற காரியதர்சி)**

# தமிழர் கலாச்சார மன்றம் – சூரிச்

செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் அவர்கள் பரதக்கலையின் நுட்பங்களை தனது மானசீகக் குருவான தனது தாயார் திருமதி ஜனீத்திரா ஜெகரூபனிடம் முறைப்படி பயின்று, இன்று யாழ். வண்ணார்பண்ணை சரஸ்வதி மண்டபத்தில் நடன அரங்கேற்றம் காண்பதையிட்டு சூரிச் தமிழர் கலாச்சார மன்றம் பெருமிதம் அடைகிறது.

இவரது குருவான திருமதி ஜனீத்திரா ஜெகரூபன், நாட்டியக்கலையை குருகுல முறைப்படி பயின்று நல்லூர் இளங்கலை மன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டு பட்டமளிக்கப்பட்டவர். தனது அன்றாட குடும்பச்சுமைகிளன் மத்தியிலும் தனது மாணவி, மகள் வைஷ்ணவிக்கு பரதக்கலையின் நுணுக்கங்களைத் திறம்பட பயிற்றுவித்து இன்று அரங்கேற்றம் காண வைக்கிறார்.

வைஷ்ணவியும் தனது குருவுக்கு நிகராக, நடனக்கலையை பயின்று அதே நேரம் கல்வியிலும் அதீத கவனம் செலுத்தி இன்று தனது நாட்டியத் திறமையை கலைநயத்துடன் வெளிப்படுத்துவதில் பெருமை அடைகிறார். இவர் திருமணப் பதிவாளர் திருமதி வரதா சோமசூரியசிங்கம் அவர்களின் பேர்த்தியுமாவார்.

தமிழர் பண்பாடும் கலாச்சாரமும் தழைக்க இவரின் பெற்றோர் ஆற்றும் பணி மகத்தானது. பாராட்டுதற்குரியது. செல்வி வைஷ்ணவி தொடர்ந்து பரதக்கலையினைப் பயின்று, தமிழர்தம் கலாசார விழுமியங்களை கட்டிக்காக்க வேண்டும் என்று இறையருளை வேண்டி, வாழ்க வளர்க என்று வாழ்த்துவோமாக.

**கலாசாரக் காவலர் செல்லையா இரத்தினமூர்த்தி அவர்கள்**
**(சூரிச் தமிழர் கலாச்சார மன்ற காரியதர்சி)**

# வாழ்த்துச் செய்தி

திரு.திருமதி ஜெகரூபன் அவர்களின் மகளான செல்வி வைஷ்ணவி ஜெகரூபன் தனது சிறு வயதிலேயே நடன அரங்கேற்றம் செய்வது மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது.

எனக்கு வைஷ்ணவியை சிறு வயதிலிருந்தே நன்றாகத் தெரியும். மிகவும் சுறுசுறுப்பானவர், எல்லா விஷயங்களிலும் ஆர்வம் கொண்டவர். இவர் என்னிடம் கணனி படித்துக் கொண்டிருக்கிறார். மிகவும் கெட்டிக்காரி. ஆழ்ந்து யோசித்து செயற்படக்கூடியவர். இச்சிறுவயதிலேயே பல துறைகளில் கெட்டித்தனமாக பயின்று முன்னேறி வரும் வைஷ்ணவி இன்னும் பல துறைகளில் பல சாதனைகளைப் புரிந்து வருங்காலத்தில் பெரும் சாதனையாளராகத் திகழவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

Rathaa Priyadaksan,
Director,
Institute of Computing and Information System,
Vivekananda Road,
Colombo.

# வாழ்த்துச் செய்தி

செல்வி வைஷ்ணவி ஜெகரூபனின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு இவ்வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலைக் கல்விக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் சின்னஞ்சிறு பிள்ளைகளே அலைந்து திரியும் சூழலில், வைஷ்ணவி என்ற இளங்குருத்தைக் கலைத்துறையில் ஈடுபடுத்திய அவரின் தாயார் பாராட்டுக்குரியவர்.

இளம் பிள்ளைகள், ஏட்டுக்கல்வியோடு நின்றுவிடாமல் கலைத்துறையிலும் ஈடுபடுவதற்குப் பெற்றோர் வழிகாட்டவேண்டுமென்பதற்கு வைஷ்ணவியின் பெற்றோர் எடுத்துக் காட்டாகவுள்ளனர். தமிழிசையையும் பரத நாட்டியத்தையும் அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. இது காலத்தின் தேவை.

கலைக் குடும்பத்தில் பிறந்த வைஷ்ணவி நடனத் தாரகையாய் மிளர்ந்து, தன் குடும்பத்திற்கும் அவர் பிறந்த மண்ணுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**நாகலிங்கம் நித்தியானந்தன்**
தவிசாளர்,
நல்லூர் மத்தியஸ்த சபை.

# வாழ்த்துச் செய்தி



திரு.திருமதி. ஜெகரூபன் ஜனித்ரா தம்பதிகளின் அன்பு புதல்வி குமாரி வைஷ்ணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம் பகவான் ஸ்ரீ சத்ய ஸாயியின் அருளாசிகளுடன் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். வைஷ்ணவி சிறுவயதில் இருந்தே தனது தாயாரையே குருவாக வலித்து அவரின் வழிகாட்டலில் பரதக்கலையின் நுணுக்கங்களை முறைமையாக பயின்று, இன்று தனது ஆடல் அரங்கேற்றத்தை நிறைவு செய்து, இக்கலைக்கும் இறைவனுக்கும் சமர்ப்பணம் செய்து எமக்கெல்லோருக்கும் பெருமை யூட்டியுள்ளார். இச்சிறு வயதில் பெரியதொரு விடயமாகும். வைஷ்ணவியின் உயர்வுக்காக சிரத்தையுடன் உழைத்த அவரின் அன்பு பெற்றோர்களுக்கும் ஏனையோருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் பல்லாண்டு வாழ்ந்து இறை துணையோடு அர்ப்பணமாக மேன்மேலும் உயர்ந்து நின்று நம் தேசத்திற்கும் மக்களுக்கும் சேவையாற்ற எல்லாம்வல்ல ஸாயிசனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ஓம் ஸாயிராம்

**மு. கோபாலகிருஷ்ணன்**
( கண்ணன் மாஸ்ரர் )
இசையமைப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி

"ஆய கலைகள் அறுபத்து நான்கு" என்பார்கள்.

கலைகள் பலவற்றுக்கும் அடிப்படையாகவும், ஆதியாகவும் உள்ளது ஆடற்கலையாகும். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக் களையும் உடற்கூறுகள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கமாகும். மனிதன் உலகில் தோன்றிய நாள் முதல் தன் மன இன்பத்தை நடனத்தால் வெளிப்படுத்தியமையை நாம் அறியலாம். உலகில் நடனமாடாத இடமும் இல்லை, மக்களும் இல்லை.

இந்துக்களைப் பொறுத்தவரை சமயமும், தத்துவமும் பிரித்துப்பார்க்க முடியாதவை. இவ்விரண்டுடனும் கலந்து நீக்கமற நிறைந்து நிற்கும் தெய்வீகக் கலையே நடனக்கலையாகும்.

கொழும்பு மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரியில் தரம் எட்டில் கல்வி கற்கும் செல்வி வைஷ்ணவி... தன் தாயை குருவாகக் கொண்டு நடனக் கலையை பயின்றுவருவது பெருமைக்குரிய விடயமாகும். தாயாரும் சிறப்பாக நடனம் பயின்று அரங்கேற்றம் கண்டவர்.

இவரது குடும்பம் கல்வியிலும் பண்பிலும் சிறந்தது. கல்வியும், பண்பும் நிறைந்த பெற்றோர், அன்பும் அறிவும் நிறைந்த பேரன், பேர்த்தி. ஆற்றல் மிகுந்த வைஷ்ணவி அனைவரின் ஒத்துழைப்புக் காரணமாகவும், இறையருளாலும் இந்நிகழ்ச்சி சிறப்புற நடைபெற இருக்கின்றது.

கல்வியிலும் கலைப்பயணத்திலும் மென்மேலும் பிரகாசிக்க எனது குடும்பத்தின் சார்பில் இறையருளை வேண்டி பிரார்த்திப்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. வளர்மதி சுமாதரன்<br>
இளஞ்சைவப்புலவர்,<br>
ஆசிரியர்,<br>
கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்.

# ஆடல் அரங்கேற்றம் ஆனந்தமாய் அமையட்டும்

செல்வி வைஸ்ணவி ஜெகரூபன் ஆடற்கலை யின்று இன்று அரங்கேற்றம் காணும் நாள். மகிழ்வுடன் வாழ்த்துக்கள்.

நம் தமிழை இயல் தமிழ், இசை தமிழ், நாடகத் தமிழ் என மூன்றாக நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளனர். இம்மூன்று தமிழும் சேர்ந்த ஒரு கலை வடிவமே நமது பரதக்கலை எனலாம். புவியில் இக்கலைக்கு ஈடான ஒரு கலை வடிவத்தைக்காண முடியாது. நம் மதத்தோடும் மொழியோடும் பின்னிப் பிணைந்த ஒரு கலையாக பரதம் மிளிர்கின்றது.

நம் இறைவனே தில்லை அம்பலத்தில் ஆடல் ஆடல் வல்லானாகவே கோலம் காட்டுகிறான். நமது புராண இதிகால கதைகளே பெரும்பாலும் நமது பரதக்கலையின் ஆடுபொருளாக அமைகின்றன. நவரசங்களை வெளிப்படுத்தும் முக பாவங்களும் அழகிய அபிநயங்களும் பரதத்தின் தனிச்சிறப்புக்கள்.

ஆடுபவரின் உடலிற்கும் உள்ளத்திற்கும் உற்சாகத்தினைத் தரும் அதேவேளை பார்ப்பவரின் கண்ணிற்கும் கருத்திற்கும் புனிதமான ஒரு விருந்தையும் பரதம் தருகிறது. இல்லமே பயிலரங்காக அன்னையே குருவாக அனைவருக்கும் அமைவதில்லை. இந்த விடயத்தில் வைஷ்ணவி கொடுத்து வைத்தவர்.

வீட்டில் உலையில் அரிசி கொதிக்க முன்பே ஒரு அடவு பயிற்சி முடிந்து விடுகிறது. மற்ற அன்னையர்கள் தொலைக்காட்சி தொடர்களில் லயித்திருக்க நம் செல்வியின் அன்னை தன் மகளின் நடனப் பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். இவை தான் இந்த இளம் பருவத்தில் வைஷ்ணவியை ஒரு தேர்ந்த நடன மணியாக்கி இன்று அரங்கேற்றம் காண வைக்கிறது.

"கலைகள் கலைஞர்கள் மூலமே வாழ்ந்து வருகின்றன". காலத்திற்கு காலம் இக்கவின் கலைகளில் வல்ல கலைஞர்கள் தோன்றிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் வரிசையில் நம் வைஷ்ணவியும் ஒருத்தியாக மிளிர வாழ்த்துகிறோம். இவ்விடயத்தில் பெற்றோர்கள், பேரர்கள் கொடுத்த ஊக்கம் பற்றியும் குறிப்பிடவேண்டும். அதிலும் அம்மம்மா திருமதி

வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம் அவர்களின் வகிபாகம் இதில் மிகப்பெரியது. அன்று தன்மகளின் அரங்கேற்ற அழகைப்பார்த்து மகிழ்ந்தவர் இன்று பேத்தியின் அரங்கேற்றத்தையும் தானே முன்னின்று நடாத்துகிறார். அதற்கு ஒரு சபாஷ்.

எங்கள் குடும்பத்தில் ஒருவராக நாங்கள் போற்றும் தம்பி வைத்திய கலாநிதி ஜெகரூபன் தனது மகளின் நடன அரங்கேற்றம் காணும் வேளை எனக்கும் வாழ்த்தும் ஒரு வாய்ப்புத்தந்தது பெரும் பேறு எனக் கருதுகிறேன்.

மீண்டும் ஒருமுறை சொல்லின் வைஷ்ணவியை என் குடும்பம் சார்பாக வாழ்த்தி அரங்கேற்ற நிகழ்வு ஆனந்தமாய் அமைய இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

என்றும் அன்புடன்
**சோதி அண்ணை,**
நீர்வேலி.

# பிரம்மஸ்ரீ ம.த. வீரமணிஐயர்

"கற்பனை வளர்த்தல் வேண்டும் கவிநயம் பிறப்பில் வேண்டும்
இப்பெரும் மனிதன் தானே இயற்கையில் கவிஞனாவான்"

என்று பாடிப்போந்தனர் கவியரசன் கண்ணதாசன். அதனைப் போலவே கவிரசமும், கலைநயமும் அங்கங்களாக அணிசெய்ய ஈழத்தாய் பெற்ற கலைக்குரிசில் வீரமணிஐயர் அவர்கள், நடைமுறை வாழ்வில் எங்கணுமே காணமுடியாத அற்புதமான இசைஞானமும் கவியாற்றலும் தன்னகத்தே கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் இணுவையூரைச் சேர்ந்த அமரர்களான பிரம்மஸ்ரீ ம.த. நடராஜ ஐயர், ஸ்ரீமதி சுந்தராம்பாள் தம்பதியினருக்கு 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் இரண்டாவது புதல்வனாப் பிறந்த வீரமணி ஐயர் அவர்கள், தனது சிறுவயதுக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (தற்போதைய இணுவில் இந்துக் கல்லூரி), உயர் கல்வியை மானிப்பாய் இந்துக்க ல்லூரியிலும் கற்றார். சிறுவயது முதலே கலையார்வம் கொண்ட இவர் தனது 22வது வயதில் தமிழகம் கலாக்ஷேத்திர நடனப் பள்ளியில் இசை, நடனம் பயின்றார். அங்கே கலைஞர் ருக்மணி அருண்டேல் அம்மையார் அவர்களுடைய அபிமான மாணவனாக சகல திறமைகளும் கொண்டு கற்றுத் தேறினார்.

பின்பு தனது தாய்நாடு திரும்பிய அவர் தான் கல்வி கற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் 33 வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றினார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவருக்கு நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில் ஸாஹித்ய ஸாஹரம் என்ற சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கொடுத்த தலைப்பில் நினைத்தவுடன் கவிபாடும் ஆற்றல் கைவரப்பெற்ற ஒரு வரகவியான வீரமணிஐயர் அவர்கள் கொஞ்சு தமிழில் மிஞ்சி விளையாடிய சந்தக்கவியின் சொந்தக்காரனாவார். அவருடைய கவிப்படைப்புகள் முற்றுமுழுதாக மரபு தழுவியதாகவும் சந்தம் கொஞ்சி விளையாடும் தன்மையுடையதாகவும் சமயங்களில் நவரசம் ததும்புவனவாகவும் படைக்கப்பெற்றுள்ளன.

"கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்..." என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இராகத்தை பல்லவியில் கொண்டமைந்து நான்கு இராகங்கள் முத்திரை அமைக்கப்பெற்ற இவரது இராகமாலிகை கீர்த்தனை, தென்னிந்திய இசை வல்லுநர் ரி.எம். சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பெற்று உலகப்பிரசித்தி பெற்றதாகும். இந்தியாவில் ரி.எம்.செந்தரராஜன் அவர்கள் அளித்த மிக முக்கிய பேட்டி ஒன்றில் தான் பாடிய பாடல்கள் அனைத்திற்குள்ளும் உள்ளம் உருகிப் பாடிய பாடல் யாழ்ப்பாணம் வீரமணி ஐயரது இப்பாடல் தான் என்று கூறியுள்ளார். திருமயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தின் உட்சுவரில் இப்பாடல் இப்போதும் காணப்படுகிறது.

கலைஞர் ரி.எம். சௌந்தரராஜன் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு இசைக்கச்சேரிகளுக்கென வரும்போதெல்லாம் ஐயர் அவர்களைச் சென்று சந்திக்கத் தவறுவதில்லை. யாழ்ப்பாணம் சுட்டிபுரம் சிவகாமி அம்மன் ஆலயத்துக்கு (கொடிகாமம்) கச்சேரிக்காக வந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் ரி.எம்.எஸ். அவர்கள் வீரமணி ஐயர் அவர்களிடம் வந்து அவரையும் அழைத்துச் சென்று கொண்டிருந்த வேளையில் கோயிலை அண்மித்த நிலையில் பட்டிமாடுகள் கூட்டம் அவர்கள் சென்ற வாகனத்துக்கு குறுக்கே வந்தபோது பயணம் தடைப்பட்டது. அப்போது அவ்வியற்கை நிகழ்வைக் கண்ணுற்ற வீரமணி ஐயர் அவர்கள்,

"பட்டிப்பசு இனங்களெல்லாம் பாலாபிஷேகம் செய்யும்
சுட்டிபுரம் வாழும் சிவகாம சுந்தரியே
கட்டியுந்தன் கால் பிடித்தேன் கருணைக்கண்ணால்
பாருமம்மா..."

என்ற வரிகள் அடங்கிய பாடலை வாகனத்தில் இருந்தவாறே இயற்றிக் கொடுத்தார். அப்பாடலை ரி.எம்.எஸ் அவர்கள் அக்கச்சேரியில் பாடி பெரும் வரவேற்புக் கிடைக்கப்பெற்றார்.

1957ம் ஆண்டு "திருமயிலைக் குறவஞ்சி" என்ற கலைநூலை வெளியிட்டு பெருமதிப்புக் கிடைக்கப்பெற்றதுடன் 1965ம் ஆண்டு நலர்லை ஆதீன சஞ்சிகையான அருளமுதத்தில்"

சாரங்கன் மருகனே சாவேரி பாலகனே
மோகன குமரனே நாயகி நாயகனே"

என்ற பல்லவியினைக் கொண்ட 16 இராகங்களில் அமைந்த இராகமாலிகைக் கீர்த்தனையை வெளியிட்டு பெரும் புகழ் கிடைக்கப் பெற்றார். இக்கீர்த்தனை தென்னிந்திய கர்நாடக இசை வல்லுநர் மஹாராஜபுரம் சந்தானம் அவர்களால் பாடப்பெற்று சிறந்த வரவேற்புக் கிடைக்கப் பெற்றதுடன் மிகுந்த பிரபல்யமும் பெற்றுள்ளது.

1978ஆம் ஆண்டு மலேசியா கோலாலம்பூர் ஸ்கோட் வீதி கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் பாட இருந்ததைக் கேள்வியுற்றவுடன் வீதியோரத்தில் அவரைச் சந்தித்த இடத்தில் வைத்தே பாடல் இயற்றி கொடுத்திருந்தார். அப்பாடல் மலேசியாவில் பெரு வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1982ம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை பொன் விழாவில் கவிமாமணி என்ற சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் நாள் அமரர் சேர். பொன். இராமநாதன் அவர்களது 54ஆவது நினைவு தினத்தில் நடைபெற்ற சிறப்புக் கவியரங்ககத்தில் அமரர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்), பண்டிகை அமிர்தாம்பிகை, முல்லைமணி சிவசுப்பிரமணியம், அமரர் சண்முககுமரேசன் அவர்களுடன் தலைமைக் கவிஞராக இருந்து இராமநாத வள்ளலின் தொண்டுகள் என்ற தலைப்பில் பொழிந்த கவித்தேன் மழை, இசைத்தட்டில் கேட்கும்போது இப்பொழுதும் மெய்சிலிர்க்க வைப்பதாகவுள்ளது.

இயல் இசையில் இவருக்கு இருந்த மேன்மையால் இயலிசை வாரிதி, மஹா வித்துவான் என்ற சிறப்பு விருதுகள் வழங்கி பாராட்டுப் பெற்ற ஸாஹித்ய ஸாஹரம் வீரமணி ஐயர் அவர்கள். 1999ஆம் ஆண்டு அக்டோபர் 06ம் நாள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ முதுமாணி (எம்.ஏ) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு தனது பாசமிகு மனைவியார் ஸ்ரீமதி ருக்மணி அம்மையார் அவர்களை பிரிந்த துயரில் மிகவும் இளைத்திருந்தார். அவருடைய மனவருத்தங்கள் அவருடைய அக்காலத்து கவிப் படைப்புக்களில் எதிரொலித்தன.

"உருகி உருகி உனை உளமாரப் பாடுவேன்
அருகில் வந்தே எனக்கு ஆறுதல் தாராயோ...
ஒருவரும் இல்லையம்மா"

என்று கோண்டாவில் சிவகாமி அம்மன் ஆலயத்திற்கு இசைத்தட்டு வெளியீடொன்றுக்கு இயற்றிய பாடற் தொகுப்பொன்றில் உள்ளம் உருகிப் பாடியிருந்தார். அவரது வீட்டிற்கு அருகில் உள்ள ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில் கந்தசுவாமி கோயில் மீது பாடிய பாடல்களின் (கீர்த்தனைகள்) தொகுப்புக்கள் மலேசியா ஸ்ரீ வாசுதேவன், ஸ்ரீமதி நித்தியஸ்ரீ ஆகியோரால் பாடப்பெற்று பெருவரவேற்புடன் ஒலிப்பேழைகள், இறுவட்டுக்களில் வெளிவந்துள்ளன.

நடனத்துறை, கவித்துறையில் மட்டுமன்றி இசைத்துறையிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த கவிமாமணி அவர்கள் 72 மேளகர்த்தா இராகங்களிலும், 175 தாளங்களிலும் இன்னும் இதற்கு மேலாகவும் உருப்படிகளை ஆக்கியுள்ளார். பல இராகங்களின் பெயர்களை முத்திரையமைத்துப் பாடியுள்ளமை இவருடைய ஆக்கங்களின் சிறப்பம்சமாகும். 72 மேளகர்த்தா இராகங்களில் முதலாவது மேளகர்த்தாவாகிய கனகாங்கி இராகத்தில் கவிமாமணி அவர்களால் முத்திரை அமைத்து பாடப்பெற்ற "கற்பகாம்பிகே கனகாங்கி நீயே" என்று தொடங்கும் உருப்படியை ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில் ஈழத்தின் இளம் நாதஸ்வர வித்துவான் சுப்புசாமி பாலமுருகன் அற்புதமாக வாசித்தபோது அருகில் தனது வீட்டிலிருந்து அதைக்கேட்டு உளமுருகிப்போன வீரமணிஐயர் அவர்கள் உடனே கோவிலுக்குட் சென்று நாதஸ்வர வித்துவான் பாலருகனுக்கு பதக்கமணிவித்து பாராட்டி ஆசீர்வதித்திருந்தார்.

கீதம், கீர்த்தனை, பதம், பல்லவி, வெண்பா முதலிய சகல வகை பாடற் துறைகளிலும் கவிபாடும் ஆற்றல் கைவரப்பெற்ற வீரமணிஐயர் அவர்கள் பல கோவில்களுக்கு ஊஞ்சற்பாக்களும் இயற்றியுள்ளார்.

பெரியோர்கள் எப்போதும் பெரியோர்கள் தான் என்பதற்கேற்ப குறைகளை விடுத்து நிறைவுதனைப் பாராட்டிப் பேசும் பெருந்தன்மை கொண்டவர். அரகேற்ற நிகழ்வுகளில் மதிப்பீட்டுரை செய்யும்போது குறைகளை விடுத்து எப்போதும் நிறைவுகளையே மதிப்பிட்டுப் பேசுவார்.

கர்நாடக இசை, நடனம் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா (Double Diploma in Dance & Music) தகைமைகளைக் கொண்டிருந்த வீரமணி ஐயர் அவர்கள் தனது அரச பணியின் நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார். 2001ம் ஆண்டு மார்கழி மாதம் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் நடைபெற்ற தென்னிந்திய இசை விற்பன்னர்களான மாம்பலம் சிவா, நடராஜ் சகோதரர்கள் (நாதஸ்வரம்), திருப்புன்கூர் ரி.ஜி. முத்துக்குமாரசாமி, இராமநாதன் (தவில்) ஆகியோரது இசை விருந்தின் இடைவேளையில் கலைஞர்களுக்கு சக்கரவர்த்திப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது வீரமணிஐயர் அவர்கள் "முத்தைத்தரு பத்தைத் திருநகை..." என்று தொடங்கும் திருப்புகழின் சந்தத்தில் கவியாசி வழங்கி கேட்போரை மெய்சிலிர்க்க வைத்தார். அதனைத் தொடர்ந்து மாம்பலம் சிவா அவர்கள் "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" என்று தொடங்கும் கவிமாமணி அவர்களின் கவிப்படைப்பை நாதஸ்வரத்தில் வாசித்ததும் மெய் உருகிப் போன வீரமணிஐயர் அவர்கள் தான் அணிந்திருந்த உத்தரியத்தைக் கழற்றி மாம்பலம் சிவா அவர்களுக்கு அணிவித்து தனது உள்ளுணர்வு மிக்க பாராட்டைத் தெரிவித்திருந்தார்.

தமிழிசை வரலாற்றில் தமிழுலகமே ஏற்றுக்கொண்ட மஹா வித்துவான் வீரமணிஐயர் அவர்கள் ஈழத்தின் ஒரு பெரும் சொத்தாவார். கவித்துறையிலும் இசைத்துறையிலும் ஒப்பற்ற, உன்னதமான படைப்புக்களை படைத்துச் சென்றிருக்கும் ஒரு பெரும் படைப்பாளியாவார். பூவுலகில் அவருடைய படைப்புக்கள் போதுமென்று கருதி இறைவன் தன்னருகில் பண்ணிசைக்க அழைத்துக் கொண்டான் போலும். 2003ம் ஆண்டு அக்டோபர் 8ம் நாள் காலையில் காலன் அவருயிரைத் தனதாக்கிக் கொண்டான். ஈழம் மட்டுமல்ல, தமிழுலகமே கண்ணீர் சிந்த ஸாஹித்யப் பெருஞ்சைலம் சரிந்தது.

# ஈழத்து நடனப் பேராசான்
# ஏரம்பு சுப்பையா

ஈழத்திருநாடு நீண்டகாலக் கலை வரலாறு கொண்டு விளங்குகின்றது. இங்கு வாழும் பிரதான குடிகளாகிய சிங்கள, தமிழ் மக்களுக்குத் தனித் தனியான மொழிகள் மட்டுமன்றிக் கலைப் பாரம்பரியங்களும் உள்ளன. தமிழர்கள் கலைப்பாரம்பரியங்களின் அவைக்காற்றுக் கலைகளிலே பண்ணிசை, கர்நாடக இசை, பரதநாட்டியம், கிராமியக் கலைகள் முதலியன குறிப்பிடற்பாலன. தென்னிந்தியத் தமிழகத்திற்போன்றே இங்கும் இக்கலைகள் வளர்ந்து வந்துள்ளன. முற்காலம் தொட்டு நிலவி வந்தாலும் சோழப் பெருமன்னர் ஆட்சிக்காலம் (கி.பி.10ம் நூ) தொட்டுப் பரதக்கலை இலங்கையிலே நன்கு நிலவியதற்குப் பல சான்றுகள் உள்ளன. பொலநறுவையிலுள்ள சிவன்கோவிலிலும், கந்தளாயிலிருந்த விஜயராஜ ஈஸ்வரத்திலும் தேவரடியார் இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. பினனைய கோவிலிலே ஏழு தேவடியார் இருந்தனர். கி.பி. 1344இல் இலங்கைக்கு வந்த மொறோக்கோநாட்டுப் பயணியாகிய இபின்பட்டுட்டா தேவிநுவரையில் இருந்த விஷ்ணு கோவிலில் 500 தேவரடியார்கள் இருந்தனர் எனக் கூறியுள்ளர். இலங்கையின் தென்மேற்குப் பகுதியிலிருந்த சில சிவாலயங்களிலே தேவாரமும் நடனமும் இடம்பெற்றதாகச் சமகாலச் சிங்கள நூல்கள், (கி.பி. 15, 16ம் நூ.) குறிப்பாகத் தூது இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன. வட இலங்கையிலே (கி.பி. 13ம் நூ. – 17ம் நூ வரை) நிலவிய தமிழரசிலே இசையும் நடனமும் நன்கு போற்றப்பட்டு வந்தன. சமகாலத் தமிழகத்திற் போன்று கோவில்களிலும் அரச அவைகளிலும் இவை இடம்பெற்று இலங்கின. பின்வந்த போர்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே இந்துக்கோவில்கள் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவை சார்பான இசையும்நடனமும் அரச ஆதரவிழந்து மங்கின. ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியிலும் பிரித்தானியர் ஆட்சியிலும் மத சுதந்திரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கோவில்கள் மீண்டும் அமைக்கப்படலாயின. அவற்றுட் பெரியனவற்றிலே சமகாலத் தமிழகத்திற் போன்று தேவரடியார்களின் சதிர்க்சச்சேரிகள் இடம்பெற்றுவந்தன. இக்கலைஞர்கள் பெரும்பாலும் அக்காலததிலே முன்னைய சிறப்பிழந்து ஒழுக்கம், ஆசாரமற்றவர்களாய் இருந்தனர். அவர்களில் ஒருத்தியான கனகி பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கனகி புராணம் எனும அங்கதச் சுவையுள்ள நூல் எழுதப்பட்டது. இக்கலைஞர் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில்

நர்த்தகியாகவும் இருந்தார் எனக் கூறப்படுகின்றது. 19ம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியிலும் இத்தகைய நிலை காணப்பட்டது. இத்தேவரடியார்களில ஒரு சாரார் குறிப்பிட்ட விழாக்காலங்களில் இந்தியாவிலிருந்து வந்து சென்றனர். 19ம் நூற்றாண்டிலிருந்த ஒழுக்கக்கேடுள்ள தேவரடியார்களையும், அவர்களின் நடனத்தையும் நாவலர் பெருமான் கண்டித்துள்ளார். அதேவேளையில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டகோவில்களில் இசையும். நடனமும் முறைப்படி இடம்பெற வேண்டும் என்பதை நாவலர் எதிர்த்திலர். ஆனால் சமகாலக் கலைஞர்களின் ஒழுக்கக்கேடுகளால் இவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். தேவரடியார்கள் தொடர்ந்தும் சில கோவில்களில் சதிர்க்கச்சேரி செய்து வந்தனர். தமிழ் நாட்டிற் போன்று இங்கும் அவர்களைக் குறிக்கும் "சின்னமேளம்", "சதிர்", "தேவடியாள்", "ஆட்டக்காரி" போன்ற சொற்கள் இழிவான கருத்திலே பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழ்நாட்டிலே கோவில்களில் சதிர்க்கச்சேரி இடம்பெறுதல் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே தடை செய்யப்பட்டது. அதேவேளையில் இக்கலைக்கு முன்னைய புனிதமும் சீரும் சிறப்பும் அளிப்பதிலே பரதக் கலைமாமணி ஸ்ரீமதிருக்மிணிதேவி அருண்டேல், இ. கிருஷ்ண ஐயர் முதலியோர் குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் உழைத்து வந்தனர். சமகால இந்திய சுதந்திர இயக்கமும் இத்தகைய கலைப்பணிகளுக்கு ஆதரவளித்து வந்தது. இதன் விளைவாகச் சதிர் மீண்டும் பரதநாட்டியமாயிற்று. பெரும்பாலும் குறிப்பிட்ட சமூகத்தினர் கற்றுவந்த கலையினைப் பண்புள்ள உயர் குடும்பப் பெண்பிள்ளைகளும் கற்கத் தொடங்கினர். பரதநாட்டியத்திலே புதிய விழிப்பும், மறுமலர்ச்சியும் ஏற்படலாயின. பரதக்கலை தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாக மட்டுமன்றி, இந்தியப் பண்பாட்டின் சின்னமாகவும் இலங்கலாயிற்று. இதன் தாக்கம் இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டதில் வியப்பில்லை. யாழ்ப்பாணத்திலே பரதக்கலை மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியோரில் காலஞ்சென்ற திரு. ஏரம்பு சுப்பையா முக்கியமான ஓரிடத்தை வகித்தார் என்பதில் ஐயமில்லை. இவரின் மிகுந்த கலைத்திறன், விடாமுயற்சி, ஈடுபாடு, தன்னலமற்ற கலைப்பணி முதலியவற்றால் யாழ்ப்பாணத்திலுள்ள படித்த குடும்பங்களைச் சேர்ந்த இளம்பெண்கள் பரதம் பயிலத் தொடங்கினர். சுதங்கை ஒலி சமூகத்தின் பல மட்டங்களிலும் காலப்போக்கிலே ஒலிக்கத் தொடங்கிற்று.

இத்தகைய சிறப்புடைய கலைஞர் சுப்பையா யாழ்ப்பாணத்திலே நெடுங்காலமாக இசைக்கும் நடனத்திற்கும் பேர் போன சில கிராமங்களில் ஒன்றான இணுவிலைச் சேர்ந்த புகழ்பூத்த அண்ணாவியார் ஏரம்புவுக்கும் தங்கமுத்துவுக்கும் மகனாக 1922ம் ஆண்டு தை மாதம் 13ம் திகதி பிறந்தார். இவர் கோண்டாவிலில் உள்ள தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயின்றார். இவர் தந்தையார் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞர். நடனத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இளம் பிராயத்திலே சுப்பையா ஆரம்ப இசை, நடனம் ஆகியவற்றைத் தகப்பனாரிடம் கற்றார். இயல்பாகவே இவருக்கு நடனக்கலையில் ஆர்வமிருந்தது. நடனத் திறமையினை இளம் வயதிலேயே வெளிப்படுத்திவந்தார். அக்காலகட்டத்திலே பொதுவாகப் பெண்கள் மேடையில் நடிக்கவோ, ஆடவோ முன்வந்திலர். எனவே, இவர் குறிப்பாக நாடகங்களிலே பெண் வேடம் தரித்து நடித்து ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார். இவரின் இந்நடவடிக்கையினை இதே காலத்திற்குச் சற்று முன் தமிழ்நாட்டிலே பிரபல கலாரசிகரும் நாட்டியக் கலைஞருமாகிய திரு.ஈ. கிருஷ்ணஐயர் பரதக்கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டுவதற்கு பெண்வேடம் தரித்து ஆடியமையுடன் ஒப்பிடலாம். 1935ம் ஆண்டளவில் இவரின் திறமையினைக் கலைப்புலவர் க.நவரத்தினம் அவர்களும் அவரின் மனைவியார் மகேஸ்வரிதேவியும் நன்கு அறிந்திருந்தனர். இவர்களின் முயற்சியால் இவரது நடனத்திறமையினை அகில இலங்கையும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

சென்ற நூற்றாண்டின் நாற்பதுகளிலே புகழ்பெற்ற நடனக்கலைஞர் கோபிநாத், அபிநய அரசி பாலசரஸ்வதி, பந்தணை நல்லூர் ஜயலக்ஷ்மி போன்ற தலைசிறந்த நடனக் கலைஞர்களின் நடனக் கச்சேரிகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. மக்கள் மத்தியிலே நடனம் பற்றிய விழிப்பினை இவையும் ஏற்படுத்தி வந்தன.

நடனக் கலையினை நன்கு கற்றுத் தேர்ச்சி பெறுவதற்கு ஆவலுற்ற திரு.ஏ. சுப்பையா 1940இல் இந்தியாவிற்குச் சென்று காரைக்குடி இராமகான சபாவிலே ஒரு நடிகராயினார். அச்சபையிலிருந்த திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தமிழர்க்குரிய சாஸ்திரீய நடனமாகிய பரத நாட்டியத்தைச் சிலகாலமாகக் கற்றார். 1946 – 1948 வரை நடனக் கலாநிதி கோபிநாத்திடம் சென்னையிலுள்ள அவரின் நடன நிகேதனில் கேரளத்திற்குரிய சாஸ்திரீய நடனமாகிய கதக்களியினையும், கிராமிய நடனத்தினையும் பயின்றார். இவ்வாறு தென்னிந்தியாவின் இருபெரும்

சாஸ்திரீய நடனங்களில் மட்டுமன்றிக்கிராமிய நடனத்திலும்நல்ல தேர்ச்சி பெற்றார். தமிழ்நாட்டிலே வாழ்ந்த காலத்திலே ஜெமினியிலே தயாரான சந்திரலேகா, சக்கரதாரி போன்ற படங்களிலும் நடிக்கும் வாய்ப்புப் பெற்றார். தாம் கற்ற கலைகளை மற்றவர்களுக்குப் புகட்டுவதிலும் மிகுர்ந்த ஆர்வம் கொண்டிருந்தார்; தாயகம் திரும்பினார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலே நடனக் கலையைக் குறிப்பாகப் பரதநாட்டியத்தினை வளர்ப்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த திரு.வி. ஆர். இராசநாயகம் 1948ல் யாழ்ப்பாண நடனக் கல்லூரி எனும் நிறுவனத்தைத் தொடங்கினார். இதிலே திரு. சுப்பையா ஒரு நடன ஆசிரியராகச் சிலகாலம் தாம் விரும்பியபடி கலைப்பணி புரிந்தார். இக்கல்லூரியிலே யாழ்ப்பாணக் கலைஞர் மட்டுமன்றி இந்தியக் கலைஞரும் பணிபுரிந்தனர். கல்லூரியின் பிரதம பரிசோதகராக நடனக் கலாநிதி கோபிநாத் விளங்கினார். இக்காலத்திலே, 1948ல் வட இலங்கைச் சங்கீத சபை இவருடைய சிறந்த ஆற்றலையும், கலைப்பணிகளையும் பாராட்டி மிகத் திறமையான கலைஞருக்கான சான்றிதழை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. இத்தகைய கௌரவம் பெற்ற இலங்கையர் இவரே. நடனக்கலையினை மேலும் நன்கு கற்கவேண்டும் என்ற ஆவல் தூண்ட மறுபடியும் தமிழகம் சென்று இக்கலையின் பல நுட்பங்களை அலசி ஆராய்ந்தபின் 1949ல் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்தார். இங்கு கொக்குவில் கந்தையா – சின்னப்பிள்ளை ஆகியோரின் புதல்வியாகிய பூரணம் என்பவரைத் திருமணம் செய்தார். இக்கலைஞருடைய கலைப்பணிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியாகவும் பண்பாளராகவும் அப்பெண்மணி விளங்கி வந்துள்ளார்.

இவர் தொடர்ந்து நடனப்பணியில் ஈடுபட்டுவந்தார். இவருடைய கலைமுயற்சிகளுக்கும் பணிகளுக்கும் சமகால யாழ்ப்பாணத்திலிருந்த கலைஞர்கள், அறிஞர்களில் ஒரு சாரார் ஆதரவளித்து இவரை ஊக்கப்படுத்தி வந்தனர். வட இலங்கைச் சங்கீதசபை நிறுவுநராகிய திரு.எஸ். பரம் கலையரசு, திரு.கே. சொர்ணலிங்கம், திரு.ஏ.பி.நடராஜா, திரு. டபிள்யூ.எம். குமாரசுவாமி, திரு. தம்பிரத்தினம் முதலியோர் குறிப்பிடற்பாலர். இக்காலத்திலே நடனப்போட்டிகளும் ஊக்குவிக்கப்பட்டுவந்தன. வேறு சில கலைஞரும் இருந்தனர். குறிப்பாக மத்திய வகுப்பினைச் சேர்ந்த இளம்பெண் பிள்ளைகள் நடனத்தினை விரும்பிக் கற்று வந்தனர். இக்காலகட்டத்திலே யாழ்ப்பாணத்திலே நடனக்கலையின் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டதெனலாம்.

1952இல் தான் அரசாங்கம் முதன் முதலாக இலங்கையின் வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு நடன ஆசிரியர் ஒருவரை நியமித்தது. இந்நியமனம் இவருக்கே கிடைத்தது. இவர் இப்பதவியினை முதலில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலே வகிக்கத் தொடங்கினார். வடக்கேயுள்ள அரச பாடசாலைகளுக்கு ஒரேயொரு நடன ஆசிரியராக இவரே இருந்தார். இவரைப் போலக் குரு கோபிநாத்திடம் பயின்ற கீதாஞ்சலி வீ.கே. நல்லையாவும் பின்னர் அரசாங்க பாடசாலைகளில் நடன ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவ்விருவருமே சிலகாலமாக அரசாங்கப் பாடசாலைகளில் நடன ஆசிரியர்களாக விளங்கினர். பின்னர் இவர் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி முதலிய பிரபல கல்லூரிகளில் நடன ஆசிரியராக விளங்கிக் கலைப்பணிகள் பல புரிந்துவந்தார். கடைசிக்காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்துக் கல்லூரி ஆகியவற்றிலே ஆசிரியராகப் பணி செய்துவந்தார். இராமநாதன் கல்லூரியிலே இராமாயண நாட்டிய நாடகம் தயாரிக்க முயற்சி செய்து கொண்டிருந்த காலத்திலே அகாலமரணமடைந்துவிட்டார். தாம் விரும்பிக் கற்றுப் பேணி வளர்த்த நடனக்கலையினைத் தொடர்ந்து வளர்த்தற்கும், பரப்புவதற்கும் மற்றவர்களின் தலையீடுகளில்லாத சுதந்திரமான கலை நிறுவனமொன்றின் அவசியத்தை இவர் உணர்ந்தார். எனவே திரு.க.தி.சம்பந்தன்,கலையரசு கே. சொர்ணலிங்கம் போன்ற நண்பர்களுடன் சேர்ந்து 1956இல் கலாபவனம் எனும் கலைக்கூடத்தினைக் கொக்குவிலிலே நிறுவினார். இந்நிறுவனத்தின் தொடக்ககாலக் கலைநிகழ்ச்சிகளிலே திரு.ஏ.ஜி. ஐயாக்கண்ணு தேசிகர், திரு.த. ராஜசிங்கம், திரு.எஸ். இராமநாதன், திரு.எஸ்.சோமஸ்கந்த சர்மா, திரு.பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, திரு. விஸ்வநாத ஐயர் முதலிய பிரபல கலைஞர்கள் பங்குபற்றினர். கலாபவனம் கலைகளின் குறிப்பாக நடனக்கலையின் உண்மையான ஒரு நிலையமாகவே இயங்கி வருகிறது. இக்கலைக்கூடதிற்கு ஒரு மண்டபமும் திறந்தவெளி அரங்கும்பின்னர் அமைக்கப்பட்டன. இவற்றை இவர் தாம் பெரும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தைக் கொண்டு தான் அமைத்தார். சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலுமிவர் இங்கு நடனம் கற்பித்தார். இக்கலைக்கூடத்தில் முதலில் இவரும், இவருக்குப் பின் மூத்த புதல்வி திருமதி சாந்தினி சிவநேசனும் பிரதம நடன ஆசிரியர்களாக விளங்கி

வந்துள்ளனர். இக்கலைக்கூடம் பல நாட்டியக்கலைஞர்களை உருவாக்கி வருகின்றது. இங்கு பந்தணை நல்லூர் பாணியிலான பரதநாட்டியமே பெரும்பாலும் கற்பிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலே தோற்றுவிக்கப்பட்ட காலத்தால் முந்திய புகழ்பெற்ற கலைநிறுவனங்களிலிது முதன்மையானது. பல்வேறு கல்லூரிகளிலும், கலாபவனத்திலும் இவரிடத்துப் பயின்ற மாணவர்கள் பலர் நடனப் போட்டிகளிற் பங்குபற்றிச் சிறப்புப் பெற்றனர்; இவரின் நடனத்திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாவும் விளங்கினர். இவர் பயிற்றுவித்த நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவர்களின் அருவிவெட்டு நடனம் பலரின் பாராட்டைப் பெற்றது. அக்காலத்தில் இலங்கைக்கு வந்த பிரித்தானிய மகாராணியார் இரண்டாவது எலிசபெத், சமகால இலங்கைப் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவெல முதலியோரும் இதனைப் பாராட்டினர். கல்வித் திணைக்களத்தினர் நடாத்திய அகில இலங்கைக் கிராமிய நடனப் போட்டிகளிலும் அதற்கு முதலிடம கிடைத்தது. இவர் பயிற்றுவித்த பண்டைத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகளின் செம்பு, வாள் நடனங்களுக்கு முதல் பரிசாக வெள்ளிக்கேடயங்கள் கிடைத்தன. வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணம் வந்துசென்ற நல்லெண்ணத் தூதுக் குழுவினர் பலருக்கும் நடன நிகழ்ச்சிகள் தயாரித்துக் காண்பித்த பெருமையும் இவருக்கு உண்டு. *1956*இலே கொழும்பில் நடைபெற்ற விவசாயப் பொருட்காட்சியில் இவருடைய மாணவர்களின் நடனத் திறமையைப் பாராட்டி உணவு அமைச்சின் செயாளர் திரு.கே. ஆழ்வாப்பிள்ளை இவருக்கு ஒரு தங்கப்பதக்கம் வழங்கினார். இவரிடம் கற்ற கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவர்கள் *1958*ல் யுனெஸ்கோ நடத்திய கிராமிய நடனப்போட்டிகளில் இரு நடனங்களில் முதலிடம் பெற்றனர். *1959*இல் டெல்கியில் நடைபெற்ற உலக விவசாயப் பொருட்காடசி விழாவில் ஆந்திரா கிராமிய நடனக் குழுவினருடன்சேர்ந்து நடனமாடும் வாய்ப்பினை இவர் பெற்றிருந்தார். சாஸ்திரீய பரதநாட்டியம் என்றால் என்ன என்பதை நன்கு புரிந்துகொள்ளாது இதனை அக்கால வழக்கிற்கு ஏற்பச் “சதிர்”, “சின்னமேளம்”, “தேவடியாள் ஆட்டம்” என ஏளனம் செய்து அதனை ஒதுக்கிவந்த யாழ்ப்பாண மக்கள் மத்தியில் நடனக்கலை ஓர் உன்னதமான கலையென்பதை அறிவுறுத்திப் பல கலைஞர்களை உருவாக்கியது மட்டுமன்றி, ஒரு கலைஞர் பரம்பரையினை உருவாக்கிய பெருமையும் இவரைச்சாரும். இவர் தயாரித்து அளித்த நடன நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வவுனியா, மன்னார், குருநாகல், கொழும்பு, காலி முதலிய பல இடங்களிலும் பெருவரவேற்பும் பாராட்டுக்களும்

கிடைத்தன. சில பொது நிறுவனங்கள் சார்பிலே நிதி திரட்டுவதற்கும் இவர் நடன நிகழ்ச்சிகள் தயாரித்து அளித்தார். எடுத்துக்காட்டாக, கொக்குவில் இந்துக்கல்லூரி கட்டடம் அமைப்பதற்குமென நிதி திரட்டுவதற்கு அளிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். 1948ம் ஆண்டு தொடக்கம் 1976இலே இறக்கும்வரை ஈழத்து நடன அரங்கிலே இவரே மிகப் பிரபல்யமான நடனக்கலைஞராக விளங்கினார். இக்கலையினை இந்நாட்டில் வளர்த்தற்கு ஓயாது உழைத்துவரும் காலத்திலே திடீரெனக் கொழும்பில் காலமானார்.

இவர் தனிநடனக் கச்சேரிகள் மட்டுமன்றிக் குறிப்பாக நாட்டிய நாடகங்களிலும் கவனம் செலுத்திவந்தார். இவரது பல நாட்டிய நாடகங்களிலே சதீ அகல்யா, சுகன்யா, பாமா விஜயம், ஊர்வசி, குறிஞ்சிக்குமரன், தம்பியர் மூவர், திருவெம்பாவை, பஸ்மாசுரமோகினி, காணிநிலம், காமதகனம், யேசுபிறந்தது, சூடாமணி முதலியன குறிப்பிடற்பாலன. இவரின் நாட்டிய நாடகங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவற்றின் வெற்றிக்கு இவரின் பரதநாட்டிய அறிவும், பயிற்சியும் மட்டுமன்றிக் கதக்களி, கிராமிய நடனங்கள், நாடகம் பற்றிய அறிவும் பயிற்சியும் சில முக்கிய காரணங்களாகும்.

மேலும் "நடனமாடினார்" போன்ற சில கீர்த்தனைகளையும் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமுண் சிரிப்பும்", முன்னமவனுடைய நாமம் கேட்டான்" போன்ற தேவாரங்களையும் இவர் நடன நிகழ்ச்சிகளிலே தக்கவாறு பயன்படுத்திப் பாராட்டுப் பெற்றார். இலங்கையிலே கீர்த்தனைகள், தேவாரங்கள் போன்றவற்றை வெற்றிகரமாக நடன நிகழ்ச்சிகளிலே பயன்படுத்தி வழிகாட்டிய சிறப்பும் இவருக்கு உண்டு. இவர் நடனம் கற்பித்த முறையும் குறிப்பிடற்பாலது. இக்கலையினை மாணவர்கள் தொடக்கத்திலே பிழையின்றிக்கற்பதை நன்கு வலியுறுத்தினார். அவர்கள் மத்தியிலே ஒழுக்கத்தினையும் கட்டுப்பாட்டினையும் கவனித்தார்; திறமைக்கு முதலிடமளித்தார். தாம் எதிர்பார்த்த நல்ல அம்சங்கள் மிளிராவிட்டால் கவலைப்பட்டார். கலையிலீடுபட்டு நன்கு முயற்சிக்கும் மாணவரை மிகவும் ஊக்கப்படுத்தினார். அன்பு, இரக்கம் ஆகியவற்றுடன் தேவையான இடங்களில் கண்டிப்பும், நிதானமும் உடையவராய் இலங்கினார்; மாணவரின் நலநன என்றும் கவனித்து வந்தார்; இறைவனிடத்தில் மிக்க பற்றுக் கொண்டிருந்தார்.

வீரகேசரி, தினகரன், தினபதி முதலிய செய்தித்தாள்களில் பேட்டிகளும் அளித்துள்ளார். "கலையினைப் பொழுதுபோக்காகப் பயிலக்கூடாது" என்பது இவரின் ஆணித்தரமான கருத்தாகும். அதன் உயர்ந்த விழுமியங்களை அழுத்திக்கூறியுள்ளார். கலையுலகில் தாம் பெற்ற அனுபவங்களைப் பற்றியும் கூறியுள்ளார். இவரிடம் முழுமையாகவோ அலலது ஓரளவோ கற்றுப்பின் இந்தியாவுக்குச் சென்றும் புகழ்பெற்ற கலைஞரிடம் கற்று நல்ல தேர்ச்சியும் ஞானமும் பெற்ற மாணவர்கள் பலர் உள்ளனர். இவர்களிற் பலர் இன்று இலங்கையின் பிரபல நடனக் கலைஞர்களாகவும் விளங்குகின்றனர். சிலர் வெளிநாடுகளிலேயும் பிரபல்யமடைந்துள்ளனர். இவ்வாறுபுகழ்பெற்றஇவரின் மாணவர்களிலே திருமதி ஸ்யாமளா மோகன்ராஜ் புகழ்பெற்ற அபிநய அரசி பாலசரஸ்வதியிடமும் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம் நாட்டியகேசரி வழுவூர் இராமையாபிள்ளையிடமும் கலைஞர் வேலானந்தன் நாட்டியக் கலாநிதி குருகோபிநாத்திடமும் திருமதி கமலா ஜோன்பிள்ளை, பிரமஸ்ரீ வீரமணிஐயர், செல்வி சாந்தா பொன்னுத்துரை முதலியோர் பரதக்கலை மாமணி ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேலிடமும், திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி கிருஷாந்தி ரவீந்திரா முதலியோர் பிரசித்திபெற்ற அடையாறு லக்ஷ்மனிடம் பரதத்தையும், திரு. வேலானந்தன், திருமதி சாந்தினி சிவநேசன் முதலியோர் திரு. குரு கோபிநாத்திடம் கதகளியையும் கற்றுப் பிரபல்யமடைந்துள்ளனர். இவர்களைவிட வேறு பல கலைஞர்களும் இவரால் உருவாக்கப்பட்டவர்கள். அல்லது ஆரம்ப அடவுகளும் அபிநயங்களுமாவது கற்பிக்கப்பட்டவர்கள். ஈழத்து நடன மரபிலே குறிப்பாகப் பரதநாட்டியம், கதக்களி ஆகிய இரு சாஸ்திரீய நடனங்களிலே மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களிலிவர் குறிப்பிடற்பாலர். எனினும் பரதநாட்டிக் கலைக்கு இவரின் பங்களிப்புகள் மகத்தானவை. தமக்கே உரிய நடன மரபை யாழ்ப்பாணத்திலே உருவாக்கியுள்ளார். இன்று இங்குள்ள பிரபல நடனக் கலைஞர் பலர் இவருடைய நேரடியான மாணவர்கள் அல்லது மாணவர்களின் மாணவர்கள். இவ்வகையில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர்களில் பலர் இவருடைய மாணவர்கள் அல்லது இவரின் மாணவ பரம்பரையினரே என்பதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. இங்கு கதக்களி கற்பித்தவர்களும் இவ்வாறு இவருடைய மாணவர்களே. இலங்கையைப் பொறுத்தமட்டில் நடனக் கலைக்கு இவர் ஆற்றிய சீரிய தொண்டுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை, நடனக்கலையில் இவர் செய்துவந்த

பணிகளையும் ஏற்படுத்திய சாதனைகளையும் ஒரு வகையிலே, தமிழகத்தைச் சேர்ந்த பிரபல நடனக் கலைஞர்களான பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வழுவூர் இராமையாபிள்ளை, பாலசரஸ்வதி, ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் முதலியோரினதும் கேரளத்தைச் சேர்ந்த குரு கோபிநாத்தினதும் சாதனைகளுடனும் ஓரளவுக்கு ஒப்பிடலாம். ஆனால் இவர்களுக்கிருந்த சில பேராதரவுகள் திரு. சுப்பையாவுக்கு இருந்தில. இவ்வகையிலே நோக்கும்போது இவரின் சாதனைகள் நன்கு குறிப்பிடற்பாலன.

கலையே இவரின் மூச்சாக இருந்தது. நடனத்தின் உருவமாக இலங்கினார். இதற்காகவே தமது வாழ்க்கையினை இவர் அர்ப்பணித்தார். தமது உடல்நலத்தைக்கூடக் கவனியாது கலைத்தொண்டு புரிந்து 54 வயதிலே அகாலமரணம் அடைந்துவிட்டார். இவருடைய கலைப்பணி பற்றி இவருடைய குருவாகிய நடன கலாநிதி குரு கோபிநாத் 1956இலே கூறியிருப்பது நினைவுகூரற்பாலது. அதாவது "கதகளி" பரதநாட்டியம், பிற கிராமிய நடனங்கள் அடங்கிய, நடனக்கலையின் சாஸ்திரம், செய்கைமுறை ஆகியவற்றை இவர் (சுப்பையா) நன்கு அறிந்து செயற்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நடனக்கலையினை மென்மேலும் வளர்த்தற்காகவே இவர் தம்முடைய வாழ்க்கையினை அர்ப்பணித்துள்ளார்" என்பதே.

இவரது கலைவாரிசுகளாகப் பிள்ளைகள் மட்டுமன்றி, மாணவர்கள் பலரும் விளங்குகின்றனர். இவரின் பிள்ளைகளிலே மூத்தமகள் திருமதி சாந்தினி சிவநேசனும், இளையமகள் திருமதி குமுதினி ஸ்ரீகாந்தாவும் நடனக்கலையிலே பெருந்தகைமைகள் பெற்று நடன ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். பின்னையவர் தற்போது கனடாவிலே நடனப்பணி புரிகின்றார்.

இவரது கலைச்சாதனையைப் பாராட்டி இவருக்குப் பல கௌரவங்கள் வழங்கப்பட்டன. வட இலங்கைச் சங்கீதசபை வழங்கிய கௌரவம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. 1960இல் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச கலாமன்றம் ஏழு கலைஞர்களைப் பாராட்டியபோது, நடன ஆசிரியருக்கான பாராட்டுக்கள் இவருக்கு வழங்கப்பட்டன. இவருக்கும் பொன்னாடை போர்த்துத் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. கலைச்செல்வி யினால் நடாத்தப்பட்ட கலை விழாவிலே மேற்படி கௌரவத்துடன்

"கலைச்செல்வன்" எனும் பட்டமும் வழங்கப்பட்டது. 1973ல் இணுவில் பரமானந்த நூல் நிலையததினர் நடாத்திய பொங்கல் விழாவிலே திரு. சபா. ஆனந்தர் இவருக்கு "அபிநய அரசகேசரி" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

தமிழ்நாட்டிலே ஸ்ரீமதி ருக்மிணிதேவி உயர்குடிப் பெண்பிள்ளை களைப் பரதநாட்டிய அரங்கிற்குக் கொண்டு வந்ததுபோல இவரும் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளை நாட்டிய அரங்கிற்குக் கொண்டுவந்து அரிய சாதனை செய்துள்ளார். நடனக் கலைக்கே தம்மை அர்ப்பணித்து அக்கலை ஈழத்திருநாட்டிலே நன்கு வளர்தற்குப் பல பணிகள் ஆற்றியுள்ளார். தாம் கற்பித்த கல்லூரிகள் மூலமும், தனிப்பட்டவகையிலே குறிப்பாகக் கலாபவனம் எனும் கலை நிறுவனம் மூலமும் நடனக்கலையைத் தாமும், தமது பிள்ளைகளும் மாணவர்களும் தொடர்ந்து பரப்புவதற்கும் வளர்த்தற்குமான சூழ்நிலையினை உருவாக்கியுள்ளார். இவரது நடனக்கலைத்திறன் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் அறியப்பட்டு இருக்கிறது. இவரது மாணவர் சிலர் வேறு நாடுகளிலும் இவரின் திறனுக்குச் சான்றாக இன்றும் இலங்குகின்றனர். இவரது அகாலமரணம் கலையுலகிற்கு குறிப்பாக இலங்கைக்குப் பேரிழப்பாகும். இவரது மறைவு குறித்துப் பிரபல நடனக் கலைஞராகிய பரதசூடாமணி அடையாறு கே.லக்ஷ்மணன் "சுப்பையா மாஸ்டர் கலைக்குப் பெரிய சேவை செய்திருக்கிறார். அவருயைட மறைவு யாழ்ப்பாணத்திற்கும், இலங்கைக்கும் பெருத்த நஷ்டம், ஈடுசெய்ய இயலாது" எனக் குறிப்பிட்டிருப்பது வெறும் புகழுரையன்று. உண்மையிலே திரு. சுப்பையா அவர்களை "ஈழத்து நடனப்பேராசான்" என அழைத்தல் மிகையாகாது.

# நாச்சிமார்கோவிலடி வி.அம்பலவாணர் - மிருதங்கம் (1927 – 1981)

மிருதங்கம் அம்பலவாணர் அவர்கள் வீணாகானபுரம் என்னும் யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியில் பொற்தொழில் செய்வோர் மரபில் (விஸ்வப் பிரம்மகுலத்தில்) 11-10-1972இல் வேலுப்பிள்ளைப் பத்தர் செல்லம்மா தம்பதிகளுக்குப் புத்திரராகப் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தவர்கள் மூவர். அவர்களுள் ஒருவர் கணேசு என்பவராவர் மற்றைய இருவரும் பெண்களாவர்.

அம்பலவாணர் அவர்கள் சிறுபராயத்தில் யாழ். இந்துக் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றார். கல்வி பயிலும் காலத்தே தமது மரபுத்தொழிலாகிய பொன்னாபரணம் தயாரிக்கும் தொழிலையும் திறம்படச் செய்துவந்தார். இக்காலத்தில் இவர் தந்தையார் காலமானார். ஆப்போது வாணர் அவர்களுக்கு வயது 11ஆக இருந்தது. இவருக்கு குடும்பப் பொறுப்பு ஏற்படவும் தனது பொன்னாபரணம் தயாரிக்கும் தொழிலின் உதவியால் ஓரளவு சமாளித்துக் கொண்டார். இவர் வாழ்ந்த சூழல் இசை ரசிக ஞானமுடையதாக இருந்தமையினால் வாணர் அவர்கள் மிருதங்க இசையில் நாட்டம் கொண்டவராய் ஆவரங்கால் பொன்னுச்சாமி என்பவரிடம் தனது 20ஆவது வயதில் மிருதங்க கல்வியை ஆரம்பித்துப் பயின்றார். தொடர்ந்து யாழ். வண்ணையில் மிருதங்க வித்துவானாகவும், மிருதங்கம் தயார் செய்யும் வேலையிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய நாட்டுக் கலைஞர் கோவிந்தபிள்ளை அவர்களிடமும் மிருதங்கம் பயின்றார். இதன் பின்னர் பல்லிய வித்வான் சுப்பையாபிள்ளை அவர்களிடமும் மிருதங்கம் பயின்றார்.

இவருடைய வார்த்தையின் இங்கிதங்கள் யாவருடனும் நல்லெண்ண உறவுகளை ஏற்படுத்தியது. தனது கலையையும் சிறிது சிறிதாக விருத்தி செய்தார். யாழ்ப்பாணத்தில் சில பாடகர்களுக்கு மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தார். மேலும் 1949ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்திற்கு நாட்டியக்கலைக்கூடத்திற்கு மிருதங்கம் ஆசிரியராக வந்த சிதம்பரம் ஏ.எஸ்.ராமநாதன் அவர்களிடமும் மிருதங்கத்தை ஐயம்திரிபறக் கற்றார். இவருடைய குருபக்தி, நற்பண்புகள், இறையருள், குருவருள் என்பன இவரை மிருதங்கக் கலையில் ஓர் உன்னத நிலை எய்தும் அளவுக்கு ஆக்கியது.

இவருடைய மிருதங்க வாசிப்பு எப்போதும் நல்லமாதிரியாக அமையும். டேகாக்கள், தொப்பிசுகம், சர்வலகு என்பன ஜனரஞ்சகமானவை. இவருடைய மிருதங்க வாசிப்பு பாட்டுக்களுக்கு மிக மிகப் பொருத்தமானது என்றே கூறலாம். பாடல்களைக் குறைவில்லாத அளவுக்கு மெருகூட்டக்கூடிய வாசிப்பு. அதாவது சொகசுகா மிருதங்க தாளம்" என்ற அளவிற்கு இவர் சேவையிலிருந்தது. இவ்வாசிப்பு எல்லோரையும் மிகவும் கவர்ந்தது. வலந்தரை, தொப்பி என்பவற்றின் சமநிலை போற்றக்கூடிய ஓர் விடயமாக அமைந்தது.

கச்சேரிகளுக்கு சிலவேளைகளில் குறிப்பிட்ட பக்கவாத்தியக் காரர்கள் வர இயலாத சந்தர்ப்பங்களில் பாடகர்களோ அல்லது இசையரங்கு ஏற்பாடு செய்தவர்களோ கேட்டால் எதுவித மறுப்புமின்றி மிருதங்கம் வாசித்துக் கச்சேரியை நிறைவு செய்யும் நற்பண்புடையவர். எந்த ஒரு மிருதங்கவித்துவானுக்கும் மிருதங்கம், குறிப்பிட்ட தேவைக்கு இரவல் கேட்டாற்கூட நல்ல மனத்துடன் வாத்தியம் தந்து உதவுவார். கலை சம்பந்தமான விடயங்களில் மற்றைய கலைஞர்களுடன் இசைந்து செயற்படும் தன்மையுடையவர். இசைபற்றி ஏதாவது ஆலோசனைகள் முன்வைத்தால் "கலந்து பகிர்ந்து கொள்வோம்" என்னும் வார்த்தையைக் கூறி யாவரையும் அணைத்துக்கொள்வார். வித்தைச் செருக்கு இல்லாத இன்மொழி பேசும் இசைக்கலைஞர்.

அம்பலவாணர் அவர்கள் தனது 26ஆவது வயதில் 1953இல் தமதுாரவரான இராமசாமிப்பத்தர் அவர்களின் மகளான காமாட்சி என்பவரைத் திருமணம் முடித்து இல்லறம் நடத்தினார். இவருக்கு நான்கு ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தைகளும் கலைப் பயிர்களாகப் பிறந்தார்கள். இவர்கள் யாவரும் கல்லூரிப் படிப்புடன், இசைக் கல்வியும் பயின்றனர். அவர்களுள் மூத்தமகன் ரகுநாதன் சிறந்த மிருதங்க வித்துவானாகக் கலைச்சேவை புரிகிறார். 2ஆவது மகன் ஜெயராமன் அவர்கள் வயலின் வித்துவானாக கலைச்சேவையை யாழ்ப்பாணததில் செய்கிறார். ஸ்ரீநிவாசன் மிருதங்கம், கடம், முகர்சிங் போன்ற வாத்தியங்களினூடாக இலண்டன் சரஸ்தி இசைக்கல்லூரியில் இசை பரப்பிக் கொண்டிருக்கிறார். பெண்கள் இருவரும் இராமச்சந்திரன் என்ற புதல்வரும் வாய்ப்பாட்டுக்கலையை நன்கு விருத்திசெய்துகொண்டு தமக்கென மாணவர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது வாணர் அவர்கள் செய்த நற்றவப்பயன் என்று கூறலாம்.

அம்பலவாணர் அவர்கள் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் எம்.கே. தியாகராஜபாகவதர் ஞாபகார்த்தமாக இசை விழாவை பல ஆண்டுகள் முன்னின்று நடத்தியதுடன், ஈழத்தின் தலைசிறந்த இசை விற்பன்னர் யாவர்களினதும் கச்சேரிகளுக்கும் மிருதங்கம் வாசித்துள்ளார். குறிப்பாக 1969ஆம் ஆண்டு ஈழம் வருகை தந்த இந்திய தமிழ்நாட்டு வித்வான் கடைய நல்லூர் மஜீத் அவர்களின் திருப்புகழ் இசையரங்குகளிற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில பல இடங்களிலும் மிருதங்கம் வாசித்து பெரும் புகழ் பெற்றார். வாணர் அவர்களுடன் அநேகமாக யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ எஸ். சுர்வேஸ்வரசர்மா அவர்களே வயலின் வாசித்துள்ளார். திரு. அம்பலவாணர் இலங்கை வானொலிக் கலைஞராகவும் சேவை புரிந்துள்ளார். மேலும் யாழ் ரசிக ரஞ்சன சபாவில் 28 ஆண்டுகள் மிருதங்க ஆசிரியராகப் பணிபுரிந்தும், தனது வீட்டில் வகுப்புக்கள் நடத்தியும் பல மிருதங்க மாணவர்களைத் தயார் செய்து இசைக்கலைச்சேவை புரிந்துள்ளார். இவர்களில் மாணவர் பரம்பரையினருள் குறிப்பிடும் படியாக இவருடைய மகன் ரகுநாதன் அவர்களைக் கூறலாம். இவருடைய மாணவர்கள் பலர் இன்னும் மிருதங்க இசைப் பரம்பரையை உருவாக்கி வருகிறார்கள்.

மிருதங்க இசைக்கலையை ஈழத்திற்கு வழங்குவதற்குப் பணியாற்றிய அம்பலவாணர் அவர்கள் மார்பு நோயினால் மிருதங்க வாத்திய வாசிப்பிலிருந்து ஓய்வுபெற்று, பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு உழைத்தார். காமாட்சி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையில் பங்கேற்று சேவை புரிந்த நம் கலைஞர் 19-07-1981 அன்று தனது கலை வாழ்வை விடுத்து நிலையுலகு வாழ்விற்குச் சென்றார். அவருடைய இசைச் சேவையானது வாரிசுகள் ஊடாக தொடருகிறது என்பதில் ஐயமில்லை.

# அமரர் விஸ்வநாதன் சிவஞானசேகரம் அவர்கள் அளவையூர் ஈன்றெடுத்த ஓர் அற்புதக் கலைஞன்

அளவெட்டி விஸ்வநாதன் இலட்சுமியம்மா தம்பதிகளின் மகனாக அற்புதம் 1949-07-13 அதிசயம் 2018-05-08 திகழ்ந்தது. ஆரம்பக்கல்வி சதானந்தா வித்தியாலயம். உயர் கல்வி அருணோதயக் கல்லூரி. சங்கீத பாக்கியமளித்த குருவாக அளவையூர் சங்கீர பூஷணம் திரு.வி.கே. நடராஜா அவர்க்ள, அமரர் சங்கீத வித்துவான் அ.திலகேஸ்வரன், அமரர் பொன். முத்துக்குமாரன். 1976இல் திருப்பனந்தாள் ஆதீனமதில் திருமுறைப் பண்ணிசை மணியும், 1977இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமதில் சங்கீத பூஷணமும் பட்டத்திற்குப் பாத்திரமானார்.

மேலும் நல்லூர், தெல்லிப்பளை, கொழும்பு, இணுவில், அளவெட்டி பிரதேச வாரியங்களின் வாயிலாக கலைஞானச்சுடர், கலைச்சுடர். கலாபூஷணம், திருநெறிய தமிழிசை வாணர், இசைக் கலாநிதி ஆகிய பட்டங்களுக்கு பெறுமதியானார்.

வசாவிளான் ம.மகா. வித்தியாலயத்திலும், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் மொத்தமாக 33 வருடங்கள் ஆசிரிய சேவைக்கு மகுடம் சூட்டினார். 1984-06-04இல் தெய்வீக நங்கை சிதம்பரப்பிள்ளை சிவயோகராணியைத் திருமணம் புரிந்து 3 பெண் இரத்தினங்களுக்குத் தந்தையானார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாப ன முதல்தர பண்ணிசைக் கலைஞர், யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழக முன்னாள் இடை வரவு விரிவுரையாளர், வட இலங்கை சங்கீத சபை பொருளாளர், பிரதம பரீட்சகா, நல்லூர் இளங்கலைஞர் மன்ற நீண்ட நாள் உறுப்பினராகவும், விழாக்குழு பொறுப்பாளராகவும், நல்லூர் ஆதீனம், துர்க்கா மணிமண்டப இசை நிகழ்ச்சிப் பொறுப்பாளராகவும் விசேடித்தார். நல்லூர், கும்பழாவளை உற்சவகால இசைவாணராக மட்டுமல்ல திருக்கேதீஸ்வரம் முதலான இலங்கையின் பிரதான ஆலயங்களில் பண்ணிசை, சங்கீத இசையின் கொடையாளியாகவும், இணுவில் இளந்தொண்டர் சபையின் சங்கீத குருவானவராகவும் மாட்சி பெறுகிறார்.

மனோதர்மக் கலைஞனாக மிளிரும் இவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசைக்கச்சேரிகளை கச்சேரி தர்மம் வழுவாது அரங்கேற்றியுள்ளார்.

சௌக்காலப் பிரயோக அலங்காரங்களினால் இசையைச் செப்பனிடும் இவர் இலங்கைக்கு வரும் இந்திய ஓதுவார்கள், இசைக்கலைஞர்களுடன் இசைந்து மகிமை சேர்ப்பவராவார். மாருதப்புரவீகவல்லி ஸ்தாபித்து, வணங்கி, வரம்பெற்ற அளவை கும்பழாவளையில் நவசந்திப்பண், தேர் உற்சவ இசையரங்கு, நவராத்திரி இசை ஆராதனை, நாம சங்கீர்த்தனம், கொடிக்கவி பாடுகின்ற அளவையூர் மூத்த புத்திருக்கின்ற பெருங்கலைஞன்.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு” *(336)*

வரலாற்று நாயகனாக இசையுலகம் கரம் கூப்புகிறது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். *(50)*

மனிதருள்ளும் தேவராக இன்று விண்ணுலகில் அரசாள்கிறார்.



PRINT @ PRINT MASTER, KOKUVIL.